24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 175 வைகாசி 08ஆம் நாள் புதன்கிழமை 22 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# பழைய முறைமையில் திருத்தம் செய்து மாகாண சபைத் தேர்தல்

## கட்சிகளுடையிலான இழுபறி முடிவுக்கு வரும் சாத்தியம்

கொழும்பு, மே 22

மாகாண சபைத் தேர்தலைச் சிறு திருத்தங்களுடன் பழைய முறைமையில் நடத்துவதற்குக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது. நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் நேற்றுக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. அதில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாகவும் பேசப்பட்டது. மாகாணத் தேர்தலை எந்த முறைமையில் நடத்துவது என்பது தொடர்பில் விவாதிக்கப்பட்டது. 21



## ஐ.தே.மு. அரசுக்கு எதிரான தீர்மானம் நேற்றுக் கையளிப்பு

கொழும்பு, மே 22

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் மக்கள் விடுதலை முன்னணி நேற்றுக் காலை கையளித்துள்ளது.

உயிர்த்த ஞாயி 21



## டிராக்டரை இயக்கிய சிறுவன் சில்லுக்குள் சிக்கி உயிரிழப்பு

*கிளிநொச்சியில் சோகச் சம்பவம்*

கிளிநொச்சி. மே 22

வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தந்தையின் உழவு இயந்திரத்தை இயக்கிய 6 வயதுச் சிறுவன் உழவு இயந்திரச் சில்லுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கிளிநொச்சி. கோணாவில் மத்தியில் 21

*தோட்டா இருந்தது எனக் கூறி*

## இராணுவம் கைது செய்த இருவருக்கு மன்று பிணை

யாழ்ப்பாணம், மே 22

பயணம் செய்த காரில் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டன என்று தெரிவித்துக் கைது செய்யப்பட்ட இருவர் நீதிமன்ற உத்தரவில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை இருவர் வல்வெட்டித்துறையில் இருந்து திருகோணமலைக்குத் திருமணச் சடங்கின் பின்னான விருந்துக்காக வாடகைக் காரில் சென்றுள்ளனர். கார் தொண்டைமானாறு பகுதியில் சோத 21

## யாழ். பல்கலைக்கழக மாணவர் வகுப்பு புறக்கணிப்பில் குதிப்பு!

*கைது செய்யப்பட்டோரை வழக்குகளில் இருந்து முற்றாக விடுவிக்க வலியுறுத்தி*

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர், செயலாளர் மற்றும் சிற்றுண்டிச்சாலை நடத்துநர் ஆகியோரை வழக்கில் இருந்து முழுமையாக விடுவிக்கும் வரை கல்வி நடவடிக்கைகளைப் புறக்கணிப்பதற்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது. 21

## சங்கிரிலா தாக்குதல்தாரி சஹ்ரான் என்பது உறுதி

*மரபணு பரிசோதனை மூலம் நிரூபணம்*

கொழும்பு, மே 22

தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் உயிரிழந்துள்ளார் என்று மரபணு பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் தெரி 21

## புலிச் சீருடையோடு மீட்கப்பட்ட மனித எலும்பு எச்சம் ஆய்வுக்கு

முல்லைத்தீவு, மே 22

முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் கடந்த 17ஆம் திகதி குழி ஒன்றை தோண்டும் போது கண்டுபிடிக்கப்பட்ட தமிழீழ விடுதலை புலிகளின் சீருடையுடன் காணப்பட்ட உடலின் எச்சங்கள் நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டு மருத்துவ ஆய்வுக்கு அனுப்பப்பட்டன.

முல்லைத்தீவு நீதிவான் எஸ் .லெனின்குமார் முன்னிலையில் சட்டமருத்துவ அதிகாரி, தடயவியல் பொலிஸார் ஆகியோரால் நேற்று இந்த அகழ்வுப் பணி முன்னெடுக் கப்பட்டது. இந்த சடலம் காணப்பட்ட பிரதேசம் அகழ்வு செய்யபட்டு எச்சங்கள் மீட்க்கபட்டு உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. மண்டையோடு சிதைவடைந்தநிலையில் காணப்பட்ட இந்த மனித எழும்பு எச்சத்துடன், 21

## மைத்திரி, ரணில் கூறினால் விலகுகின்றேன் ரிசாத்

கொழும்பு, மே 22

அரச தலைவர் அல்லது தலைமை அமைச்சர் சொன்னால் நான் பதவி விலகுகிறேன். வேறு யார் கூறுவதையும் ஏற்று செயற்பட நான் தயாராக இல்லை. இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் முன்னிலையில் இவ்வாறு விசனத்துடன் தெரிவித்துள்ளார் அமைச்சர் ரிசாத் 21

## ரிசாத் மீதான குற்றச்சாட்டுக்களை ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு

கொழும்பு, மே 22

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஆராய சிறப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை நடைபெற்றது. அதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரசிங்க, எல்லோ 21

## திகதி வழங்காது விட்டால் நாடாளுமன்று முற்றுகை

*எச்சரிக்கின்றார் விமல்*


கொழும்பு, மே 22

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இன்னும் இரு வாரங்களுக்குள் விவாதத்துக்கு எடுக்கச் சபாநாயகர் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாடாளுமன்றம் மக்களால் முற்றுகையிடப்படும் என்று 21

உங்கள் மொபிடெல் பில்களுக்கு பின்வரும் வங்கிகள் மற்றும் சுப்பர் மார்க்கெட்டுகளில் சௌகரியமாக பணம் செலுத்துங்கள்/ரீலோட் செய்யுங்கள்.
Sri Lanka Telecom Mobitel

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
(பிலிப்பியர்-1:21)

# மரண அறிவித்தல்



மண்ணில் 23 . 02 . 1950

விண்ணில் 18 . 05 . 2019

## சுப்பையா சண்முகராசா

யாழ் கன்னாதிட்டியை பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சண்முகராசா 18.05.2019 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-இராசம்மா தம்பதியரின் மகனும், ஜெயாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மீனாட்சி மற்றும் தனலக்சுமி, ஜெயலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும், ராஜம், கீதா, ,ஜெயபாரதி (சுவிஸ்), நாககிரூஷ்ணன் (காலேப்), மாலதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேந்திரம், ரகுராமன், தீத்து, மனாசே, சர்மிளா (சர்மி) ஆகியோரின் அன்பு மாமனும், ரதுஜன், பவினகா, ஸ்டீபன், காருண்ஜா, ஜோசஸ், திவ்யா, கிரேசியன், ஹெவன்ஸ்டான், அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.05.2019) புதன் கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக தாவடி கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**மகன் - நாககிருஷ்ணன் (காலேப்)**

**பழம் வீதி, ஆதித்தியன் வளவு, கோப்பாய் தெற்கு, இருபாலை.**

**077 608 2228**

# மம்மி!

வட கிழக்கு ஆப்ரிக்காவில் உள்ள, எகிப்து நாட்டை, பழங்காலத்தில் பார்வோன்கள் என்று அழைக்கப்படும் மன்னர்கள் ஆட்சி செய்தனர்.

இவர்கள் இறந்தால், உடலை, நறுமண பொருள்கள் பூசி, பிரமிடு என்ற கல்லறையில் அடக்கம் செய்வர். அந்த உடல்கள் இன்றளவும் கெடாமல் உள்ளன. அவற்றை, 'மம்மி' என்பர்.

இந்த, 'மம்மி'களை ஆராய்ச்சி செய்து வருகின்றனர். பார்வோன்களின் கல்லறைகளை ஆராய்ச்சி செய்தவர்களில், பிரிட்டிஷ் தொல்பொருள் ஆராய்ச்சியாளர், லார்ட் கார்னார்வோன், ஹோவர்ட் கார்டர் ஆகியோர் முக்கியமானவர்கள்.

அவர்கள் ஒரு எகிப்திய கல்லறையை, 1922ல் திறந்து, ஆராய்ச்சி செய்தனர்.

இந்த ஆய்வில் ஈடுபட்டவர்கள், துணைக்குச் சென்றவர்கள் என, அந்த கல்லறைக்குள் நுழைந்த அனைவரும், சில மாதங்களில் இறந்தனர். இந்த ஆராய்ச்சிக் குழுவினரின் சாவுக்குக் காரணம், பார்வோனின் சாபம் என, கதை கட்டிவிட்டனர்.

'என் கல்லறைக்குள் நுழைகிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள்' என்று, பார்வோன் மந்திரம் போட்டதாக பரப்பிவிட்டனர். ஆனால், அந்தச் சாவின் மர்மம் இப்போது தான் வெளிவந்துள்ளது.

அவர்கள், 'ஹிஸ்டோ பிளாஸ் மோசிஸ்' என்ற நோய் தாக்கி இறந்தனர் என, கண்டறியப்பட்டுள்ளது. இந்த நோய் தாக்கினால் மரணம் ஏற்படும்; இது ஒருவகை, காளானால் ஏற்படுகிறது.

பிரமிடுகளுக்குள் இருக்கும் வவ்வால்கள் மீது, அந்த காளான் துகள் பட்டு, அதன் மூலம் நோய் பரவுவதை அறிந்துள்ளனர். இந்த நோயால் பாதிக்கப்பட்டு, ஆராய்ச்சியாளர்கள் இறந்தது தெரியவந்துள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து கந்தசாமி



அச்செழு வடக்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வில்லடி பூநகரியை வசிப்பிடமாகவும் தற்போது அச்செழுவில் வசித்து வந்தவருமாகிய சரவணமுத்து கந்தசாமி 21.05.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், வில்லடி பூநகரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சேதுலிங்கம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அருந்தவத்தின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (அதிபர், யா/திக்கம் சித்திவிநாயகம் வித்தியாலயம்) தேவராணி, காலஞ்சென்ற சந்திரமோகன் மற்றும் சந்திரபவான் (பிரதிஅதிபர், யா/ புற்றாளை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதாஸ்னி, அமுதராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கீர்த்தனா (மாணவி-யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), அபிசேகன் (மாணவன் யா/நெல்லியடி மத்திய கல்லூரி), அபிசாயினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா, பொன்னம்பலம், சங்கரப்பிள்ளை மற்றும் சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2019) புதன்கிழமை மதியம் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் அச்செழு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**க.ரவீந்திரன் 0770201311**
**க.சந்திரபாவன் 0767589315**
**க.தேவராணி 0775572455**

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



மலர்வு 05 . 06 . 1939

உதிர்வு 21 . 05 . 2019

## கந்தர் பொன்னம்பலம்

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மேட்டுத்தெரு தேணிக்கல் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்றவர்களான கந்தர் கனகம் தம்பதிகளின் புதல்வன் பொன்னம்பலம் நேற்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி பூமணி பொன்னம்பலம் அவர்களின் அன்புக் கணவரும் கிட்டிணபிள்ளை அம்பலவாணி, சுந்தரம், சரவணமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும்அமரர்தவராசாதிருமதிகலையின்பம்சந்திரலிங்கம், செல்வநாயகம் (வாணி கணினிப் பதிப்பகம்), பிரபாகரன் (பிரான்ஸ்), சுபாஸ்கரன் (வாணி டியிட்டல், வவுனியா) சிவபாலன் (உதவி ஆணையாளர் உள்நாட்டு இறைவரித்திணைக்களம்) கிருஷ்ணதேவி (லண்டன்), குமரன் (வாணி டியிட்டல்), காலஞ்சென்ற குமணன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற சந்திரலிங்கம், சிவகாமி (கச்சேரி, வவுனியா), பவாணி(பிரான்ஸ்), புவனலோஜினி, தமயந்தி(மக்கள் வங்கி ,யாழ்ப்பாணம்)தவக்கொடி(லண்டன்), கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனிதா , தர்ஷன், சசீந்தன், சதீஸ்ராஜ், ரவிராஜ்,ஆதித்தன் , பிரணவி, கோவர்த்தினி, ஆராதினி, கிருத்திகா, பிரசாந்த், அபினன், அபர்னன், அகரதன், தானுஜன், துவாரகா, துளசிகா, பிருந்தகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2019) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## திருமதி பாலசுந்தரம் ஞானமணி



யாழ்ப்பாணம் மட்டுவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் பிரம்படிவீதிகொக்குவில்யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுந்தரம் ஞானமணி கடந்த (21.05.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராசையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலசுந்தரத்தின் அன்புமனைவியும் சூரியகுமார் (அவுஸ்திரேலியா), வக்சலா, ஜங்கரன் (மலேசியா), தயாபரன், துஸ்யந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் நந்தினி (அவுஸ்திரேலியா) துர்க்காதரன், (சதீஸ் வீடியோ, பஸ்நிலையம் யாழ்ப்பாணம்), சியாமளா (மலேசியா), அஞ்சலி ஆகியோரின் மாமியாரும் பரிமளம், சிவனேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கிந்துசா, கோபிகன் (அவுஸ்திரேலியா), சங்கீர்த்தன், சாருணிகா, கர்சாயினி (மலேசியா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2019) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**துர்க்காதரன் 077 421 9408**
**தயாபரன் 077 515 6952**
**துஸ்யந்தன் 076 947 2893**
**72/13A, பிரம்புவீதி, கொக்குவில் யாழ்ப்பாணம்**

**தகவல்: பு.துர்க்காதரன் (சதீஸ் வீடியோ பஸ்நிலையம், யாழ்ப்பாணம்)**

# ஆசிரிய நிலை ஒய்வும் 60ஆவது அகவை விழாவும்



யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில்
சங்கீத ஆசிரியையாக பணியாற்றி இன்று (22.05.2019)
மணி விழா கண்டு ஓய்வு பெறும்
எமது அன்புத் தாயார்

**திருமதி. செல்வராணி வேல்நாயகம்**

அவர்களை மனதார வாழ்த்துவதுடன்
இன்று மாலை 4.00 மணியளவில் தனது இல்லத்தில்
பிறந்த நாளைக் கொண்டாடவுள்ளதால் உற்றார் உறவினர்
நண்பர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து
சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

Best Wishes

**பிள்ளைகள்**
**077 302 8733**

# மூத்த பத்திரிகையாளர் முத்துலிங்கம் காலமானார்



யாழ்ப்பாணம், மே 22
"உதயன்" பத்திரிகையில் நீண்டகாலம் பணியாற்றிய பத்திரிகையாளரும், சிறந்த மொழிபெயர்ப்பாளருமான அ.முத்துலிங்கம் (வயது77) நேற்றுமுன்தினம் பிரான்ஸில் காலமானார்.

அரச சேவையில் பணியாற்றிய முத்துலிங்கம் உதயன் ஆசிரியர் பீடத்தில் உதவி ஆசிரியராகவும், நூலகராகவும் பணியாற்றியிருந்தார். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறந்த புலமை கொண்டிருந்த அவர் உதயன் பத்திரிகையில் கஜனி என்னும் புனைபெயர் உட்படப் பல புனை பெயர்களில் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

சிங்களப் பத்திரிகைகளில் வரும் ஆக்கங்களை பெருள் மாறாது சிறப்பாக தமிழாக்கம் செய்வதில் திறமையுடையவராகத் திகழ்ந்த இவர், 1990 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இருந்து 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உதயனில் பல ஆக்கங்களை எழுதியிருந்தார்.

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்ட வீதியைச்சேர்ந்த இவர், பின்னர் பிரான்ஸ்க்குத் தமது குடும்பத்தினருடன் அவர் புலம் பெயர்ந்திருந்தார். இவரது இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
12 . 07 . 1986



இறப்பு
19 . 05 . 2019

எமது **AIA யாழ்ப்பாணம் மெட்றோ காப்புறுதி கிளையின்**
பிராந்திய முகாமையாளர் **முருகையா மகேந்திரராஜ்** அவர்களின்
அன்புச் சகோதரனும்
எமது நிறுவனத்தின் வெளிக்கள
முகாமையாளருமான

**முருகையா முகுந்தராஜ்**

19.05.2019 அன்று அகாலமரணமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது நிறுவனம் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**AIA காப்புறுதி நிறுவனம்**
**யாழ்ப்பாணம் மெட்றோ கிளை, யாழ்ப்பாண கிளை.**

**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்




2018 ஜூலை மாதம் 1ம் திகதி முதல் 2019 ஜூன் மாதம் 30ம் திகதி வரை உங்கள் கணக்கின் வருடாந்த சராசரி தொகைக்கு அமைய சம்பத் வங்கியின் சன்ஹிந்த மருத்துவ பிரதிலாபங்களை இம்முறையும் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

* இதற்கு தகுதி பெற குறைந்தபட்சம் ரூ. 75000/- வருடாந்த சராசரி தொகையாக இருத்தல் வேண்டும்.

**இதற்கு தகுதி பெறுவதற்கு தேவையான குறைந்தபட்ச தொகையை உங்கள் கணக்கில் பராமரிக்குமாறு மதிப்புடன் நினைவூட்டுகின்றோம்.**

Sampath Sanhinda Saver
இதயத்தால் இளமையானவர்களுக்காக

0112 30 30 50 www.sampath.lk Sampath Bank Fitch Ratings A+(lka)

# சி. வி. இராமன்



சி. வி. இராமன் இளம் வயதிலேயே சிறந்த அறிவாளியாக விளங்கினார். இருந்தாலும், அவர் எந்த வேலையையும் ஒருமைப்பாட்டுடன் செய்யவில்லை என்பதால் அவரது தாயார் மிகவும் வருந்தினார்.

ஒருநாள் அவரை அழைத்து பூதக்கண்ணாடி யையும் சில காகிதங்களையும் கொண்டு வரச் சொல்லிக் காகிதங்களை கீழே போட்டுக் கண்ணாடியை வெய்யிலில் காட்டினார்.

பூதக்கண்ணாடியைப் பிடித்த தாயின் கைகள் இங்கும் அங்குமாய் அசைந்து கொண்டிருந்தது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு தனது கைகளைப் பூதக்கண்ணாடி யின் ஒளிக்குவியல் காகிதத்தின் மேல் படுமாறு நீட்டினார்.

ஒளியின் ஒரு முனையில் தீ காகிதத்தை எரித்தது. இதைக் கவனத்துடன் பார்த்த சி. வி. இராமன் ஆச்சரியப்பட்டார்.

உடனே அவரது தாயார், ஒருமுகப்படுத்திய ஒளிக்கதிர்கள் நெருப்பாகிக் காகிதத்தை எரிக்கும். ஆனால் ஒருமுகப்படுத்தாத கதிரின் ஒளியில் நெருப்பு உண்டாகாது.

அதுபோல் நீயும் உள்ளத்தை ஒருமுகப்படுத்தினால் எந்த வேலையிலும் வெற்றி அடையலாம் என்று அவருக்கு அறிவுரை கூறினார்.

அன்று முதல் தாயின் அறிவுரையை மனதிற் கொண்டு மன ஒருமைப்பாட்டுடன் தனது செயல்களைச் செய்ய தொடங்கிய இராமன், பிற்காலத்தில் உலகமே போற்றும் சர் சி வி இராமன் என்று ஆனார்.

## பாப்பா! பாப்பா!

பாப்பா! நாளைய தலைமை நீயல்லவோ!
இன்றைய கடமைகளைச் செய்திடு! பாப்பா!
பெற்றோர் பெரியோர் சொற்படி நடந்திடு! பாப்பா
பெரியவராய் நீயும் மாறும் காலம் வந்திடும் பாப்பா

நல்ல நல்ல பேச்சுகள் நளினமாய்ப் பேசிடு பாப்பா
நாளும் பொழுதும் நல்லதைச் செய்திடு! பாப்பா
உனது வீட்டைச் சுற்றி அழுக்குகள் அகற்றிடு! பாப்பா
சுகாதாரம் பேணிடில் நல்ல சுகமாய் வாழலாம்பாப்பா

## பெயர் மாற்றம்

**கந்தன் கணேசலிங்கம்** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **கந்தன் கெவின்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **கந்தன் கெவின்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**கந்தன் கெவின்**

(cs.cs 15043) (13)

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 21.05.2019 | 2521 | சிவப்பு |

தனுசு

வெற்றி இலக்கங்கள்: 10 48 54 57

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 38,56,894/=

22.05.2019ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | சீட்டிழுப்பு திகதி |
|---|---|
| 772 | 21.05.2019 |

வெற்றி இலக்கங்கள்: 18 29 37 65 ஆங்கில எழுத்து M

அடுத்த வெள்ளிக் கிழமைக்கான ஜக்பொட் ரூ. 26, 235,304/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

நீல நிற டிக்கெட்டுக்கள் 24.05.2019 ஆம் திகதி வெள்ளிக் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 615

வர்ணம் : நீலம்

சீட்டிழுப்பு திகதி: 2019.05.21

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,902,900/-

வெற்றி இலக்கங்கள்: 20 32 57 71 ஆங்கில எழுத்து O

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 974

சீட்டிழுப்பு திகதி 2019.05.20 திங்கட்கிழமை

D 26 62 65 66

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,895,408/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு

☆ பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் **25.05.2019 சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு** நேரில் சமுகம் தரவும்.

**392/6, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

## சேவை நலன் பாராட்டு



எமது வித்தியாலய சங்கீதபாட ஆசிரியர்

**திருமதி செல்வராணி வேல்நாயகம் (SLTS 1)**

சேவை விபரம் :

யா/மந்துவில் அ.த.க பாடசாலை
22.03.1990 - 04.07.1995
யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்
05.07.1995 - 22.05.2019

29 ஆண்டுகளாய் இசைப்பணியாற்றி இன்று (22.05.2019) புதன்கிழமை சேவையிலிருந்து ஓய்வு பெறும் வேளை இசை ஆசிரியையின்

மகத்தான சேவை நினைந்து மகிழ்வான வாழ்வு தொடர மனதார வாழ்த்துகின்றோம் - அன்பு மலர் சூட்டிப் போற்றுகின்றோம் !

வாழ்த்துவோர் : பாடசாலை சமூகம்
யா/ விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்.

Congratulations

## பெயர் மாற்றம்

கைதடி மத்தி கைதடியில் வதியும் **இராணி** ஆகிய நான் இன்றுமுதல் எனது பெயரை **செல்வராணி** என மாற்றுவதோடு இப் பெயரையே சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்

**செல்வராணி**

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்நகர் அருகே இயங்கும் **மிக்ஷர் கொம்பனி** ஒன்றிற்கு **மிக்சர்**, **பகோடா** ஆகியன போடத் தெரிந்த அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை.

**077 648 7264**

## வேலையாள்கள் தேவை

**மிக்சர் கொம்பனி**

ஒன்றிற்கு தங்கி நின்று வேலைசெய்யக் கூடிய ஆண், பெண் இருபாலாரும் (சமையல் தெரிந்தவர்கள்) தேவை.

**076 038 8010**

## பணிப்பெண் தேவை

S.P.இராமநாதன் வீதியில் யாழ் பல்கலைக்கழகம் கிழக்குப் பக்கத்தில் சிறிய குடும்பமொன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். வயது 35 - 50 வரை

**077 783 3897/021 221 5179**

## COMPUTER TRAINING (சம்பளத்துடன்)

கணினி தொழிற்பயிற்சியின் பின் வேலை வாய்ப்பும்பெற்றுக்கொடுக்கப்படும். (Programming, IT Marketing, Hardware, Data Entry...) MICRODGITEL

**076 300 5506**


QUEST INTERNATIONAL UNIVERSITY PERAK



Dual **MBA**

Leading to Doctor of Business Administration (DBA)

Sri Lanka UGC Recognized

**MBA**

✔ முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை தொழில்சார் கல்வித் தகைமையா.....?

✔ வர்த்தக ரீதியான தந்திரோபாயங்கள் உங்கள் வாழ்க்கையை உயர்த்திடும்.

✔ இரட்டைத் தகைமை **MBA** என்றும் உங்கள் முன்னேற்றத்துக்கு உந்து சக்தி...

**MBA in**

**Finance**
**Marketing**
**HR**

**Duration Approximately 12 to 18 Months**

**Why Choose Us?**

- Industrial visit to foreign country
- Flexible lecture time and mood
- Well experienced and qualified panel of lecturers

BLC CAMPUS

For more information: **0777 174 443**

23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443

E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS (IFB)
### Procurement of Medical Equipment & Building Works and Photocopy Machine & Air conditioner Service

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works and Service as specified following Tables.

01) Medical Equipment
02) Building Construction and renovation
03) Photocopy Machine & Air conditioner Service

B. Bidding will be conducted through National Competitive Bidding Procedure

C. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements

01) Bidders shall have valid business registration
02) and business registration for supply of respective Works, Supplies and Service
03) Regional preference and CIDA grade preference will be apply as stipulated in Public Finance Circular No 4/2016(11

D. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna (021 2222278/4557. ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm

E. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a non refundable fee as specified in the table by cash on working days from 23.05.2019 to 04.06.2019 during 09.00 Hours to 15.00 Hours.

F. Bids must be delivered on or before 10.00 Hours of 06.06.2019 to the address given below or deposited in the tender box available at the Room of Additional Regional Director of Finance. Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives

G. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security
The valid for 118days from the bid opening

H. Pre bid meeting under following on 30.05.2019

01) Table I – 1.00pm
02) Table II – 11.00am
03) Table III – 10.00am

I. Procument committee will be the right to make final dicision in regard the accept or reject Bids

**Table I - Medical Equipment**

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/ME/2019/01 | Pulse Oxymetre | 04 | 1000.00 | 15,000.00 |
| | Multipara Monitor | 05 | | |
| | ECG Machine | 03 | | |
| | Spot Lamp | 01 | | |
| | Nebulizer | 02 | | |
| NP/RDHS/PSSP/ME/2019/03 | New Dental Chair and unit with all necessary accessories | 02 | 1000.00 | 20,000.00 |
| | Autoclave | 01 | | |
| | Compressor | 01 | | |
| | Dental X-ray | 01 | | |
| NP/RDHS/PSSP/ME/2019/04 | Medical Refrigerator | 02 | 1000.00 | 45,000.00 |
| | Five part automatic analyzer | 01 | | |
| | Weighing scale (bathroom) | 22 | | |
| | Distilled water apparatus | 01 | | |
| | Digital Balance (for pharmacy | 04 | | |
| NP/RDHS/PSSP/ME/2019/06 | Slings & Suspension therapy | 01 | 1000.00 | 30,000.00 |
| | Quadnceps table | 01 | | |
| | Shoulder wheel | 01 | | |
| | Interferential therapy | 01 | | |
| | Power web | 01 | | |
| | Electrical nerve stimulator | 01 | | |
| | Static bicycle exerciser | 01 | | |

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/ME/2019/02 | BP apparatus | 22 | 1000.00 | 5,000.00 |
| | Stethoscope | 02 | | |
| | Opthalmoscope | 01 | | |
| | Steidiometer | 02 | | |
| | Snellen chart | 02 | | |
| | IV Stand | 05 | | |
| NP/RDHS/PSSP/ME/2019/05 | Speculum | 11 | 1000.00 | 20,000.00 |
| | Examination Bed | 03 | | |
| | Stretcher | 04 | | |
| | Wheel chair | 03 | | |
| | Dressing trolley | 04 | | |
| | Folding screen | 05 | | |
| | Stainless steel drum large | 06 | | |
| | Hospital bed with mattress | 11 | | |
| | Bed side locker (wooden) | 05 | | |
| | Medicine trolley | 02 | | |
| NP/RDHS/PSSP/ME/2019/07 | Bio Chemistry analyzer | 01 | 1000.00 | 50,000.00 |

**Table II - Building Construction and Renovation**

| Tender No | Work Item | ICTAD Registration Required | Non Refundable Tender Fee | Bid Security | Basic Cost Estimate (Millions) |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/PSDG/2019/Build/01 | 01. Renovation of Oxygen Plant at Base Hospital Pointpedo<br>02. Renovation of ETU Roof Work at Base Hospital Pointpedro<br>03. Improvement Work To Eaves and Roof Plumbing to OPD Block at Base Hospital Pointpedro | C9 and C 8 or above (Building) | 1,000.00 | 20,000.00 | 1.5Mn |
| NP/RDHS/PSDG/2019/Build/02 | 01. Re Routing the Sewage System at Base Hospital Pointpedro | C9 and C 8 or above (Building) | 1,000.00 | 20,000.00 | 1.6Mn |
| NP/RDHS/PSSP/2019/03 | 01.Renovation of Building at PHC Pannakam<br>02.Temporary Shed at MOH Chavakachery<br>03.Partition Work at PMCU Mandaitivu | C 9 and C8 or above (Building) | 1,000.00 | 10,000.00 | 0.74Mn |
| NP/RDHS/PSSP/2019/04 | 01.Construction of Patient waiting shed at Divisional Hospital Kopay<br>02.Improvement Work to Dental Unit & Staff rest room at DH Kopay<br>03.Repair and renovation of Disable Toilet<br>04.Improvement work to Dispensary & Drug store at DH Kopay<br>05.Repair and renovation of Dental Doctor's toilet<br>06.Improvement work to OPD Waiting area<br>07. Improvement work to OPD cooridoor & record room<br>08. Construction of watcher shed<br>09. providing Children park facilities | C 8 and C7 or above (Building) | 1,000.00 | 50,000.00 | 4.7Mn |

**Table III- Photocopy Machine Service & Air Conditioner Service**

| Reference No | Item | Qty | Non Refundable fees |
|---|---|---|---|
| NP/RDHS/Photocopier/service/01/2019 | Toshiba Photocopy Machine | 74 | 1,000.00 |
| | Cannon Photocopy Machine | 33 | |
| | Gestemer Photocopy Machine | 06 | |
| | Sharp Photocopy Machine | 04 | |

| Reference No | Item | Qty | Non Refundable fees |
|---|---|---|---|
| NP/RDHS/Intercom/service/03/2019 | Intercom System Service and maintenance | 01 | 1000.00 |

| Reference No | BTU | Item | Qty | Non Refundable fees |
|---|---|---|---|---|
| NP/RDHS/AC/service/02/2019 | 9000BTU<br>12000BTU<br>18000BTU<br>24000BTU<br>36000BTU<br>48000BTU | Mechanical Service Singer, LG, York, and other Brand | 300 | 1,000.00 |
| | | Pump down Service Singer, LG, York and other Brand | | |
| | | Normal Service Singer, LG, York and other Brand | | |
| | | Gas filling 1kg Singer, LG, York and other Brand | | |

**Chairperson**
**Regional Procurement Committee**
**RDHS Office, Jaffna.**

---

**Hotel ஒன்றுக்கு சமையலுக்கு ஆள்தேவை**

- தங்கி நின்று சேவை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வெளிமாவட்டம் விரும்பத்தக்கது.
- தங்குமிட வசதி
- மூன்றுவேளை உணவு வழங்கப்படும்.
- சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**077 450 8003, 021 221 4464**

---

**வீடு வாடகைக்கு**

நல்லூர் கோயில் பின் வீதியில்
அமைந்துள்ள வீட்டின் மேல் மாடி
3 அறை, பெரிய சமையலறை
பெரிய Hall, 2Bathroom
வாடகைக்கு உண்டு.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

**021 222 6461**

---

## University of Jaffna, Sri Lanka
## Faculty of Graduate Studies

**Admission for Postgraduate Research Programme**
**Master of Philosophy (M.Phil) & Doctor of Philosophy (Ph.D.) –2019**

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy (M.Phil.) and Doctor of Philosophy (Ph.D.) research programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna in the disciplines listed below

***Agriculture Related Fields:***
Agricultural Biology (Plant Protection, Biotechnology), Agricultural Chemistry (Soil Science, Food Science), Agricultural Economics (Applied Economics), Agricultural Engineering, Water Management, Animal Science, Agronomy (Bio-statics)

***Arts Related Fields:***
Archaeology, Anthropology, Art History & Aesthetic, Christian Civilization, Dance, Drama and Theatre Arts, Economics, Education, Fine Arts, Geography, Hindu Civilization, History, Music, Philosophy, Political Science, Psychology, Sanskrit, Sociology, Tamil

***Engineering Related Fields:***
Civil Engineering, Computer Engineering, Electronic & Electrical Engineering, Mechanical Engineering

***Management Related Fields:***
Human Resource Management, Accounting, Financial Management, Marketing

***Science Related Fields:***
Biochemistry, Botany, Chemistry, Computer Science, Fisheries Science, Mathematics, Statistics, Physics, Zoology, Material Science

Medium Tamil / English

Duration Full Time (M.Phil. – 02 years : Ph.D. – 03 years) / Part Time (M.Phil. – 03 years : Ph.D. – 04 years)

**Total Fees**

| | |
|---|---|
| M.Phil. (Social Science Field) | 158,000.00 (8,000/- : Library Refundable) |
| M.Phil. (Pure/Applied Science Field) | 218,000.00 (18,000/- : Library & Lab Refundable) |
| Ph.D. (Social Science Field) | 225,000.00 (8,000/- : Library Refundable) |
| Ph.D. (Pure/Applied Science Field) | 285,000.00 (18,000/- : Library & Lab Refundable) |

**Applications**

Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P. : 021 222 3608) either in person or post, on a payment of Rs. 1500/- per application form on submission of receipt in support of the payment to the University Account number
162-1-001-6-0000880 at the People's Bank.

Those who wish to obtain application forms by post are requested to send a money order / Postal order for
Rs. 1500/- per application form drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 22.5 x 10 c.m. (9" x 4") in size.

Application forms and other details will also be available in the Faculty web site www.grad.jfn.ac.lk. Those who wish to send the downloaded application form should attach a money order/postal order for Rs. 1500/- drawn in favour of the Bursar, University of Jaffna or the receipt in support of the payment to the University Account number 162-1-001-6-0000880 at the People's Bank.

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely by registered post or by hand in the office hours. The research programme applied for should be indicated as "Application for M.Phil. / Ph.D.– 2019" on the top left hand corner of the envelop.

**Closing Date:**

**31/07/2019**

Note :

- Refer the Faculty website for the Eligibility requirements of M.Phil. & Ph.D.
- Applications should be reached to the Faculty on or before the closing date. Otherwise, the application would not be considered.
- Incomplete or Illegible applications will not be considered.
- Applicant will be selected on the basis of

1. availability of supervisor in the particular topic of research or
2. availability of admission in the particular field of research or Laboratory facilities

**Registrar**
**21/05/2019**

# 25ஆம் ஆண்டு நினைவலைகள்





அமரர்
**வே.சின்னத்தம்பி**
(முன்னாள் தலைவர்,
வலி.கி.தெ.பகுதி
ப.நோ.கூ.சங்கம்)
தோற்றம்
15.02.1930

செல்வி
**சி.சிவதர்சினி**
(வேம்படி மகளிர்
உயர்தர வகுப்பு மாணவி)
தோற்றம்
29.10.1976

செல்வி
**க.புஸ்பராணி**
(நீர்வேலி மத்தி)
தோற்றம்
17.07.1966

**மறைவு : 22.05.1994**

ஆலம் விருட்சமாய்
வேரூன்றி விழுது விட்டு
நிழல் தந்த உங்களை
காலன் – சுப்பசொனிக் உருவில்
ஏக புத்திரி மருமகள் சகிதம்
உங்களையும் வேரோடு
சாய்த்து 25 ஆண்டுகள் ஆனதோ
ஆறுமோ எங்கள் துயரம்
எம் உயிர் உள்ளவரை
உம் நினைவுகள் தொடரும்

நீர்வேலி.
(cs.25389) (13.17)
சி.சிவகாமி (மனைவி)
சி.சிவரூபன் (மகன்)

## வீடு வாடகைக்குண்டு

வவுனியா தோணிக்கல்லில் வீடு வாடகைக்குண்டு. வாடகை 7000. முற்பணம் ஒரு லட்சம்.

**076 604 7601,**
**024 222 2289**

(CS/25520) (11.17)

## வேலை வாய்ப்பு

**அலுமினிய பிற்றிங், வெல்டிங், வெள்இரும்பு** வேலை பழக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும். தங்குமிட வசதி, சம்பளம், உணவு வழங்கப்படும்.

இடம்: கொழும்பு 077 646 8452

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**ஜெயதேவி செல்வரத்தினம்**



தோற்றம்
22.08.1943

மறைவு
22.05.2018

திதி:–
வைகாசி பூர்வபட்ஷ
அட்டமி

குடும்பத்தின் ஜீவனாகி குலவிளக்காய் நீரிருந்தீர்
கொடுங்காலம் வந்ததுவோ கொண்டும்மைச் சென்றதுவோ
ஆண்டொன்று போனாலும் ஆறாது உம் பிரிவு
மீண்டுந்தான் காண்பதற்கு மீளாதே உம் வாழ்வு
கண்ணீரால் தான் நினைந்து கரைகின்றோம் எம்
வாழ்வை மனமீது உம்மை எண்ணும் மனதோடு வாழ்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(CS/25372) (13.17)

துணைவி, வட்டுக்கோட்டை. கணவர், குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# அருணாசலம் முத்துலிங்கம்

(ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்,
ஊடகர் "கஜனி" எழுத்தாளரும். மொழிபெயர்ப்பாளர், உதயன் பத்திரிகை நிறுவனம்)



மலர்வு
03.12.1942

உதிர்வு
20.05.2019

காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும், இராசாவின்தோட்டம் யாழ்ப்பாணம். தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் முத்துலிங்கம் 20.05.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - லக்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகங்கை (பிரான்ஸ்) அவர்களின் ஆருயிர்க் கணவரும், அரவிந்தன் (லண்டன்), சுதர்சன் (பிரான்ஸ்), ரமணன் (லண்டன்), கஜனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசிகா (லண்டன்), ஆரத்தி (பிரான்ஸ்), சிவாஜினி (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, நடராசா, சுந்தரம்மா, பார்வதிப்பிள்ளை. சிவபாக்கியம், திருநாவுக்கரசு, மாணிக்கத்தியாகராஜா (வத்தளை), செல்லம்மா, சரஸ்வதி மற்றும் தனபாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கதிரவேல்பிள்ளை, தவமணி, பாலசுந்தரம் மற்றும் பஞ்சாச்சரம் (கடுக்கன் - நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும், ஆகாஷ், பிரதிகாஷ், அஸ்விகா. அத்வைதா, வர்ஷவி, தஷ்வின், பிரமிகா, நேமிகா ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2019) புதன்கிழமை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| சிவகங்கை | - மனைவி + 339 806 87435 |
| அரவிந்தன் | - மகன் + 447 902 420 238 |
| சுதர்சன் | - மகன் + 336 149 92180 |
| கஜனி | - மகள் + 447 742 653 550 |
| தனபாலசிங்கம் | - சகோதரன் + 942 122 25356 |

தகவல்
குடும்பத்தினர்
82/1, குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



# கிருஷ்ணபிள்ளை மனோன்மணி

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை மனோன்மணி 20.05.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா- சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கிருஷ்ணபில்ளையின் அன்புமனைவியும், சிவசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பேரின்பமூர்த்தி (இன்பம்) மற்றும் சந்திரா, மேனகா (முன்னாள் பிரதி அதிபர், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), மலர்விழி (கனடா), மதிகுமார் (கனடா), காலஞ்சென்றவர்களான உதயகுமார், ஜெயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், அங்கநாதன் (வைஸ்ணவி புடைவையகம், ஊர்காவற்றுறை), ஜெயபாலன் (கனடா), யோகறஞ்சிதம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வைஸ்ணவி (கனடா), தியானா (கனடா), மகிஷா (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2019) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை,
ஊர்காவற்றுறை.


(CS/23881) (11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

மேனகா - 077 048 6876

## மரண அறிவித்தல்கள்

மண்ணில் 03 . 04 . 1943



விண்ணில் 18 . 05 . 2019

# நாகமுத்து சண்முகலிங்கம்

உரும்பிராய் வடக்கு உரும்பிராயைப் (பலாலி வீதி) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சண்முகலிங்கம் 18.05.2019 சனிக்கிழமை காலமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - முத்தம்மா தம்பதிகளின் மகனும், ராஜபூபதியின் அன்புக் கணவரும், பூபாலசிங்கம் பரிமளம், பரமலிங்கம், கமலாதேவி செல்வரட்ணம் (செல்லையா), காலஞ்சென்ற செல்வராணி ஆகியோரின்சகோதரரும், விஜிதா (ஜேர்மனி), ரெஜினா (கனடா), சுதாகரன் (சுவிஸ்), ஜங்கரன் (ஜேர்மனி), அனுராகரன் (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், யோகராசா (ஜேர்மனி), தயாபரன் (கனடா), அகல்யா (சுவிஸ்), மயூரா (ஜேர்மனி), சுகன்யா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பலாலி வீதி,**
**உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.** (CS/25803)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 224 1045, 077 501 5325**

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

**பிறப்பு:21.03.1951** **இறப்பு:23.04.2019**



கடந்த 23.04.2019 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர்**
**கார்த்திகேசு முத்துலிங்கம்** (ஆசாரி)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 23.05.2019 வியாழக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**இராமகிருஸ்ணா லேன்,**
**கோண்டாவில்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

# சின்னத்தம்பி மகாலிங்கம் (பட்டு)



82/15, பருத்தித்துறை வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகாலிங்கம் (பட்டு) நேற்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் அமிர்தாஸ் (லண்டன்) சிறோமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் நாகேஸ்வரி கந்தசாமி, கமலாதேவி, இராசமணி, தியாகராசா, சந்திரராசா, சரோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான தவமணி, கமலாதேவி, பஞ்சாட்சரம் ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2019) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**82/7, பருத்தித்துறை வீதி,**
**3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்.**

# துரைச்சாமி யோகரட்ணம்



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் றக்காவீதி, வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி யோகரட்ணம் நேற்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - இராசலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகாம்பிகையின் அன்புக் கணவரும், துளசியின் (பிரான்ஸ்) பாசமிகு தந்தையும், திருநாவுக்கரசு செல்வனின் அன்பு மாமனாரும், சந்தோஷ், நிலான் ஆகியோரின்பாசமிகுபேரனும், யோகராணி, யோகநாயகி, யோகேஸ்வரன் (ஜேர்மனி), யோகநாதன் (ஜேர்மனி), யோகாம்பிகை, யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு அண்ணனும், தனபாலசிங்கம், அமிர்தலிங்கம், கனகலிங்கம், சந்திராதேவி, கிருபாநிதி ஆகியோரின் மைத்துனரும், சுரேஸ்குமார் (ஜேர்மனி), சதீஸ்குமார் (ஜேர்மனி), ராஜ்குமார், சஜிகரன், பிரசன்னா, தாட்சாயினி (கனடா), தணிகைச்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காயத்திரி (ஜேர்மனி), கஸ்தூரி (ஜேர்மனி), தனுஷியா (ஜேர்மனி), செந்தூரன் (ஜேர்மனி) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2019) புதன்கிழமை இல.60, வைமன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/23882)(11.17)

**077 943 5088**

# தம்பு குமாரசாமி



அன்னை மடியில் 27.02.1937
மண்ணில் 21.05.2019

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு குமாரசாமி நேற்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும், கனகமலரின் பாசமிகு கணவரும், செல்வராசா (சுவிஸ்), குகதாசன் (லண்டன்), லோகநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பவானி (சுவிஸ்), பிரியதர்ஷினி (லண்டன்), ரஜிதா ஆகியோரின் மாமனாரும், ஆரணி+ டினோஷன், அபிலாஷ், கஜன், குமரன், லனுஷான், கபிஷான், துஷானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2019) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காயா வீதி,**
**வடலியடைப்பு.** (CS/10070)(11.17)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவான்"

தோற்றம் 13 . 07 . 1932



மறைவு 19 . 05 . 2019

## திருமதி இராசம்மா அப்பையா

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும், உடுவில், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா அப்பையா கடந்த 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-இலட்சுமி தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லப்பா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து, கிட்டிணபிள்ளை, செல்லையா, நாகம்மா, இளையதம்பி, வள்ளிப்பிள்ளை, செல்லப்பா, பொன்னுத்துரை, சரவணை, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான விஜயரட்ணம், இராசமலர், தர்மரட்ணம் மற்றும் ரஞ்ஜினி, ஜெயரட்ணம் (லண்டன்), குணரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சத்தியபாமா, சத்தியநாதன் மற்றும், ஜெயகௌரி, ஜெயபாலசுந்தரம், கெங்காதேவி, உதயகலா ஆகியோரின் அன்பு மாமியும், பிரசாந்தன், லேகாஜினி, சதீசன், கேசவன், மதிவதனி, தனபாலசிங்கம், நவநீதன், தர்சனன், பிறேமினி, ஜெயந்தன், தயாளன், சுதர்சன், பிரேத்ஜி, தர்மிளா, ஜெயராசா, தட்சாயினி, நிதர்சன், கஜந், கீர்த்திகா, றொபி, சுஜீவன், வாகீசன், அபிநயா, வசீகன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தஸ்விகா, பிரித்திகா, கிருஷ்ரி கன் (ஹரிஸ்) ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2019) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தல் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச்சு றோட், சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்**

**077 358 6649, 077 326 5212**

## தவறவிடப்பட்டுள்ளது

சுதுமலை தாவடிச்சந்தி கந்தர்மடம் வரையிலான பாதையில் மோட்டார் சைக்கிளுக்குரிய வாகன வருமானவரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பொதிஒன்று தவறியுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து **பா. சிவசுப்பிரமணியம் திருவள்ளுவர் ஒழுங்கை இல 15 கந்தர்மடம்** எனும் முகவரியில் சேர்ப்பிக்கவும் அல்லது **077 772 2215** இலக்க தெலைபேசிக்கு தொடர்பு கொள்ளவும்.


## நல்லூரில் வீடு வாடகைக்கு

நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு மிக அருகில் சகல வசதிகளுடன் அழகிய பெரிய வீடு 3லட்சம் ரூபா முற்பணத்துக்கும் மாதம் 20,000 ரூபா வாடகைக்கும் உண்டு.
**No Bargain Please**
**076 322 3687**
**ஜதீசன் - 077 969 0962**

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை தேவகுருநாதன் (குட்டித்தம்பி)

**(தம்பிராசா எரிபொருள் நிரப்பு நிலைய (நல்லூர் மார்கட்) உரிமையாளர்)**



நல்லூரைப் பிறப்பிடமாகவும் 142, ஆடிய பாதம் வீதியை வசிப்பிடமாகவும் நல்லூர் மார்கட் தம்பிராசா எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளருமாகிய கணபதிப்பிள்ளை தேவகுருநாதன் (குட்டித்தம்பி) 18.05.2019 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பேபிசறோஜாவின் அன்புக் கணவரும், செங்கோடன் (UK), அமுதா (ஆசிரியை,கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும், புஸ்பகரணி (UK), துஷ்யந்தன் (இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு மாமனும், வெண்ணிலா (UK)வின் பேரனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், இராமநாதன் ஆகியோரின் சகோதரரும், முத்துலிங்கம் (கனடா), இராசலிங்கம் (ஆஸ்திரேலியா), சண்முகநாதன் (கனடா), காலஞ் சென்ற இராசதுரை (கனடா) மற்றும் ஜெகதீஸ்வரன் (ஆஸ்திரேலியா), புவனேஸ்வரி (ஆஸ்திரேலியா), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2019) வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் 10.00 மணிவரை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு: **021 222 7752, 077 699 5366**

## சின்னத்தம்பி முருகேசு

**(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்)**



இடைக்குறிஞ்சி வரணியைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாக கொண்ட சின்னத்தம்பி முருகேசு (ஓய்வுபெற்றபிரதம எழுதுவினைஞர்) கடந்த (20.05.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சீதேவன் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசமணியின் (பவளம்) அன்புக்கணவரும் காலஞ்சென்ற வர்களான தெய்வானைப்பிள்ளை, அம்பலவாணர், மாணிக்கம் மற்றும் பார்வதிப்பிள்ளை, தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும் சேரழகன் (ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி), பூவழகி, பூங்குழல் (ஜேர்மனி), வேங்குழல் (ஜேர்மனி), இயாழினி செங்கையாழியன் (ஆசிரியர், கிளி/கறுக்காய் தீவு மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் யசோதா, இரவிச்சந்திரன், அற்புதராஜா (ஜேர்மனி), புஸ்பவதி, கருணாகரன் (ஜேர்மனி), நித்தியா (ஆசிரியர், யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுசன் (களனிப்பல்கலைக்கழகம்), யானுஷன், கிருஷ்ணகோபி, பபிலா (யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்), திவாகர் (ஜேர்மனி), ஆரபி (ஜேர்மனி), அபிநாஸ்(ஜேர்மனி), ஆருஷா(ஜேர்மனி), நிதிலா, எழில்வேந்தன், விதர்ஷன், கோபிஷன், இராகவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2019) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சாரதா வீதி, சங்கத்தானை
சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 711 0169**

மலர்வு 08 . 12 . 1936



உதிர்வு 21 . 05 . 2019

## நீலக்கண்டு செல்லக்கண்டு

நவக்கிரியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நீலக்கண்டு செல்லக்கண்டு நேற்று (21.05.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களானநீலக்கண்டுகதிராசிதம்பதியினரின்அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா அன்னமுத்து தம்பதியினரின் அன்புமருமகனும்புஸ்பமலரின்(மணி)அன்புக்கணவரும்காலஞ்சென்றவரான சரஸ்வதியின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இராசேந்திரம் , இராணிமலர் (ராணி), இராசமலர், (பேபி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமகள் (ஆசிரியை, யா/கந்தரோடை தமிழ்கந்தையா வித்தியாசாலை) சிவசீலன், (லண்டன்), திரிவேணி, திசாயினி (கனடா), நிகேதினி (ஆசிரியை, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் பார்த்தீபன், செல்வகுமாரி (லண்டன்), சந்திரகுமார், பகீரதன் (கனடா), கேபவன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வினேதன், விஸ்ணுப்பிரியன், அபூர்வா (லண்டன்), ஒளவை (லண்டன்), வள்ளுவன் (லண்டன்), பாவலன் (கனடா), பானுஷா (கனடா), ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2017) புதன்கிழமை பி.ப 12.30 மணியளவில் சோமராந்தோட்டம் உடுவிலிலுள்ள அவரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மருமக்கள்
077 744 8105, 077 699 4910,
077 868 0748**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## சிறுவனின் இறப்புத் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட 9 வயதுச் சிறுவன் உயிரிழந்தமைக்கு மருத்துவ சிகிச்சை வழங்கலின் கவனயீனம் காரணமா என்பது தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி, தர்மபுரத்தைச் சேர்ந்த 9 வயதுச் சிறுவனுக்கு இருதயத்தில் துவாரம் உள்ளது என்று மருத்துவ நிபுணரால் அறிக்கையிடப்பட்டிருந்தது. அந்தச் சிறுவன் கடந்த சனிக்கிழமை தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். அவனுக்கு இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது. சத்திர சிகிச்சையின் பின்னர் மருத்துவமனை விடுதியில் சிகிச்சை வழங்கப்பட்டது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சிறுவன் உயிரிந்தான் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவனின் உயிரிழப்புத் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் ஆரம்ப விசாரணைகளை மேற்கொண்டதுடன், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான காயத்திரி சைலவனிடம் அறிக்கை சமர்ப்பித்தனர்.

அந்த மருத்துமவனைக்குச் சென்ற யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். இருதயத் துடிப்புக் குறைந்ததை அடுத்துச் சிறுவன் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ நிபுணரின் முன்னிலையில் சிறுவனின் சடலத்தை உடற்கூற்றுச் சோதனைக்கு உட்படுத்தி, அவரது உயிரிழப்புக்கான காரணத்தைக் கண்டறிந்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேலதிக நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அந்தத் தனியார் மருத்துவமனையில் சிறுவனுக்குச் சத்திர சிகிச்சை மேற்கொண்ட மருத்துவ நிபுணர், விடுதியில் சிறுவனுக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர், தாதியர்கள், மருத்துவமனைப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்டோரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கிய மேலதிக நீதிவான, சிறுவனின் உயிரிழப்புக்கு மருத்துவ சிகிச்சை வழங்கலில் உள்ள கவனயீனம் காரணமா எனக் கண்டறிந்து நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

(எ-37)

## சிறுபான்மையினரின் பாதுகாப்பை அரசு கண்டுகொள்ளவே இல்லை

### பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

வவுனியா, மே 22

சிறுபான்மை மக்களின் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொண்ட கூட்டரசுகூட சிறுபான்மை முஸ்லிம்களின் பாதுகாப்புத் தொடர்பில் அக்கறை செலுத்தவில்லை என்று வவுனியா நகர சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஆர்.எம். லரீப் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த செய்திக் குறிப்பின், குண்டுத் தாக்குதல் சம்பவங்களுக்குப் பின்னர் கடந்த 13ஆம் திகதி சில இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக நன்கு திட்டமிட்ட இனவாத தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டது. கடந்த காலங்களிலும் முஸ்லிம்கள் மீது இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்கள் நாட்டை ஆட்சி செய்த, ஆட்சி செய்து கொண்டிருக்கும் அரசின் காலங்களிலும் இடம்பெற்றுள்ளன.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் தர்கா நகர் பேருவளை, அளுத்கம, கலவரங்கள் இடம்பெற்றன. முஸ்லிம்களின் உயிர், உடமைகள், சொத்துக்களுக்குப் பெரும் சேதங்கள் விளை விக்கப்பட்டன. பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் இனவாதிகளால் எரித்து நாசமாக்கப்பட்டன. இவ்வாறான சூழ்நிலையில் தான் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையில் கூட்டரசு முஸ்லிம்களின் அமோக ஆதரவைப் பெற்று 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது.

முஸ்லிம் சமூகத்துக்காகக் குரல் கொடுக்கின்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் பற்றி பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டு அவரின் குரலை நசுக்க முற்படுவதைக் கண்டிக்கின்றோம். முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அனைத்து சமூகங்களுக்கிடையிலான சமூக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப இந்த அரசு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றுள்ளது.

(து-110)

## தீயில் எரிந்து வீடு நாசம்



மன்னார், மே 22

மன்னார், தரவன்கோட்டைக் கிராமத்தில் வீடொன்று தீயில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இந்தச் சம்வம் நேற்று நண்பகல் நடந்துள்ளது. மின் ஒழுக்கு தீ விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. பொலிஸார் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குடும்பத் தலைவர் தொழிலுக்குச் செல்ல வீட்டில் மனைவியும் 3 வயதுக் குழந்தையும் இருந்துள்ளனர். குழந்தை வீட்டில் தூக்கிக் கொண்டிருக்க, தாய் ஒரு தேவைக்காகச் சற்றுத் தொலைவில் உள்ள வீடொன்றுக்குச் சென்றுள்ளார். அப்போது வீட்டின் கூரை தீப் பற்றி எரிந்துள்ளது. அயலவர்கள் வீட்டுக்குள் இருந்த குழந்தையைக் காப்பாற்றியதுடன், தீயை அணைக்க முயன்றனர். எனினும் வீடு முற்றாக எரிந்து நாசமாகியது என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-60)

## சந்தேகத்துக்கு இடமாக நடமாடியோர் கைது

மன்னார், மே 22

மன்னார், பள்ளிமுனைக் கிராமத்தில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடினர் என்று தெரிவித்து இருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்தச் ம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு நடந்துள்ளது.

இரவு 11.30 மணியளவில் இருவர் சந்தேகத்துக்கு இடமாக நடமாடினர் என்றும், அவர்களைப் பிடித்து விசாரித்தபோது முரண்பாடான தகவல்களைத் தெரிவித்தனர் என்றும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். அவர்கள் இருவரும் கற்பிட்டி மற்றும் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, இருவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மன்னார் பொலிஸார் அவர்கள் இருவரையும் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-56)

## மூச்சுத் திணறலால் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 22

மூச்சுத் திணறல் ஏற்பட்டு முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி, சங்கத்தானையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடந்துள்ளது. சின்னையா முருகேசு (வயது 80) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மூச்சுத் திணறல் ஏற்பட்டு அவர் சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்றும், எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-159)

## சான்றிதழ் உற்பத்தி நிலையமாக மாறியுள்ள பல்கலைக்கழகங்கள்

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 21

நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்கள் சான்றிதழை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகளாக மாறிக் கொண்டு வருகின்றன என்று வடக்கு மாநாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

இன்று நியமனம் பெற வந்துள்ளவர்களில் எத்தனை பேர் 5 ஆம் ஆண்டு படிக்கும் போது ஆசிரியராக வர வேண்டும் என்று நினைத்தீர்கள். (சபையில் 3 பெண்கள் கைகளை உயர்த்தினர்). எஞ்சிய 69 பேருக்கும் இடையில்தான் ஆசிரியராக வேண்டும் என்று எண்ணம் வந்ததோ தெரியவில்லை. உலகத்துக்கு வெளிச்சம் காட்ட வேண்டிய நீங்கள் இன்று நியமனத்தை பெற்று சில காலத்தின் பின்னர் இங்கு மீண்டும் வந்து இடமாற்றம் வேண்டும் என்று நிற்பீர்கள். அதற்கு பல காரணங்களைக் கூறுவீர்கள்.

பாழாய் போன அரசியல் வாதிகளின் பின்னால் சென்று அவர்களின் பரித்துரைக் கடிதத்தோடு வந்து நிற்பீர்கள். அதை எனக்கு அனுப்பி வைப்பார்கள். இது நான் கண்ட அனுபவம். உங்களில் பல பேர் அரச தொழில் வேண்டும் நினைத்திருப்பீர்கள். சரி ஆசிரிய தொழில் என்றாலும் கிடைத்தது என்று வந்திருப்பார்கள். இது தான் உண்மை. வேலை தரம் அரசில் பார்ப்பதில்லை. பென்சன் கிடைக்கும், ஓய்வு கிடைக்கும் என்று தான் பலர் அரச தொழில் வேண்டும் என்று நினைப்பார்கள். ஆனால் இன்று நீங்கள் பெரும் பொறுப்பை பெற்றுக் கொண்டுள்ளீர்கள். அதை கவனமாக செய்ய பொறுப்போடு செய்ய வேண்டும்.

உங்களை விட உயர் நிலையில் இருக்கும் ஒருவரை திருமணம் செய்து அதன் பின்னர் வெளிநாட்டுக்கு போக நினைப்பீர்கள். அது வரைக்கும் என்றாலும் இந்த தொழிலை செய்யுங்கள். அங்கு போன பின்னர் தான் முக புத்தகத்தின் ஊடாக எமக்கு இலவச ஆலோசனை வழங்குவீர்கள். இதைத் தான் எல்லோரும் செய்கிறார்கள்.

மாகாணத்துக்கு கிடைக்கும் வரவுசெலவு நிதியில் 55 வீதத்தை நாம் கல்விக்கு செலவழிக்கின்றோம். ஆனால் நாம் இன்னும் ஒரு நிலையை கல்வியில் அடையவில்லை. போரின் தாக்கம் எங்களை இன்னும் கல்வியில் முன்னேற விடவில்லை. தயவு செய்து ஆயிரம் நாள்கள் என்றாலும் இந்த ஆசிரியர் சேவையை சரியாக செய்யுங்கள். என்றார்.

நிகழ்வில் தகவல் தொழில் நுட்ப பாடத்துக்காக 57 பேரும், கணித விஞ்ஞான பாடத்துக்காக 15 பேரும் என 72 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இது தவிர விவசாய போதனராசியார் 9 பேருக்கான நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன. (எ-7)

## வெடிப்புச் சம்பவத்தால் அச்சங்குளத்தில் அச்சம்



மன்னார், மே 22

மன்னார் அச்சங்குளம் கிராமத்தில் நேற்றுமுன்தினமிரவு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதால் அச்சம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

நானாட்டான் பிரதேசத்துக்குட்பட்ட அச்சங்குளம் கிராமத்தில் வெடிப்பு இடம்பெற்றது.

அச்சங்குளம் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் காணப்படும் பாழடைந்த வீடு ஒன்றினுள் வெடிப்பு நடைபெற்றது. உடனடியாக அச்சங்குளம் கடற்படையினர் முருங்கன் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து ஆராய்ந்து பார்த்ததில் இது பட்டாசு வெடிப்புச் சம்பவம் என்றும் வீட்டினுள் வெடித்தபடியால் அழுத்தம் அதிகமாகி பெரும் சத்தம் கேட்டது என்றும் தெரிவித்தனர். (து-213)

## கிழக்கு இடமாற்றங்களை இரத்துச் செய்யப் பணிப்பு!

கொழும்பு, மே 22

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் இடமாற்றங்களை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச தலைவருக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை கலந்துரையாடல் ஒன்று நடந்துள்ளது. அந்தக் கலந்துரையாடலை அடுத்தே அரச தலைவர் இந்தப் பணிபபுரையை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றிய முஸ்லிம் ஆசிரியர்கள் அனைவருக்கும், ஆளுநர் திடீர் இடமாற்றம் வழங்கியிருந்தார். பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இடமாற்றம் வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆளுநரின் இந்த நடவடிக்கையால் தமிழ் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்து அங்கு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. இந்தநிலையிலேயே அரச தலைவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள் ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ)

## அலங்காரத் திருவிழா





தென்மராட்சி வரணி அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் பொங்கல் விழாவுடன் ஆரம்பமானது. தொடர்ந்து 15 நாள்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 31ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், முதலாம் திகதி தேர்த்திருவிழாவும், 2ஆம்திகதி தீர்த்தத்திருவிழாவும்நடைபெறவுள்ளன என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)



## குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம், மருதனார்மடம் சிறிராம் ஜிம்மின் 21ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வருடா வருடம் இந்த நிலையத்தால் நடத்தப்பட்டுவரும் குருதிக்கொடை நிகழ்வில் பல இளைஞர்கள் கலந்து கொண்டு குருதிதானம் செய்தனர்.

நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை மருத்துவ அதிகாரி பிரதீபன் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர். (ஐ)

முதல் தடவையாக

# யாழ்ப்பாண மாவட்டத்தில் இஞ்சி செய்கைக்கு மானியம்




யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கு முதல் தடவையாக இஞ்சி செய்கைக்கான மானியம் வழங்கப்படவுள்ளது என்று மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடங்களில் விவசாயிகள் இஞ்சி செய்கையில் ஈடுபட்டனர். அந்தச் செய்கை வெற்றியளித்தது. அத்துடன் இஞ்சி செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். இதனால் இஞ்சி செய்கையை மேற்கொள்வதற்காக முதல் கட்டமாக 30 பேருக்கு மானியம் வழங்கப்படவுள்ளது. விவசாயி ஒருவருக்கு 4 பரப்பில் பயிரிடக் கூடிய வகையில் 50 கிலோ இஞ்சி வழங்கப்படவுள்ளது. பயிரிப்பட்ட 9 மாதத்தில் இதன் பயனைப் பெறலாம். இதற்கான நிதியை அரச தலைவர் செயலகம் வழங்குவதற்கு முன் வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-ஐ.7)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



கொடிகாமம்,மே 22

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சைவ சமயப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மறவன்புலவு மத்தி சிறி பேச்சி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு ஆலய முன்றலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் அ.நிமலரோகன், ஆசிரியர் ப.தீபன், பூநகரி பிரதேச செயலக அலுவலகர் திருமதி ஜெயக்குமார் சுபாசினி, அன்பு உற்பத்தி நிலையத்தின் செயலர் திருமதி பிரதாப் புஸ்பமாலா, மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)

## வெங்காய இறக்குமதி வரி 20 ரூபாவால் அதிகரிக்கும்

கொழும்பு, மே 22

வெங்காயத்துக்கான இறக்குமதி வரியை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விவசாயத்துறை அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள் ளார்.

இதற்கமைய ஒரு கிலோ வெங்காயத்துக்கான இறக்குமதி வரி 20 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

உள்ளூர் உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார். (த)



# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் உள்ளூராட்சி உறுப்பினர்கள் பங்கேற்கமுடியாது

யாழ்ப்பாணம்,மே 22

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பங்குபற்ற முடியாது. ஆனால் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பங்கு பற்ற முடியும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத் திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாகக் கேட்கப்பட்ட கேள்விக்கு இவ்வாறு பதில் வழங்கப்பட்டுள்ளது.

பல மாதங்களின் பின்னர் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி மாவட்டச் செயலகக் கேட்போர் கூட்டத்தில் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மத்தியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு கருத்துக்கள் பெறப்பட்டன. அதன்போது அங்கு வந்த உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை முன் வைக்கும் போது சில அரசியல் உயர் பிரமுகர்கள் உள்ளூராட்சி உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றலாமா என்ற கோணத்தில் கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

இதற்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்குத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கேட்கப்பட்ட கேள்விக்கே இவ்வாறு பதில் வழங்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

அரசநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின்படி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் அதாவது மாநகர முதல்வர், நகர மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் பங்கு பற்ற முடியும்.

இதில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பங்கு பற்ற முடியாது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக மக்கள் பிரதிநிதி என்ற ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுவின் பிரதிநிதிகளின் கட்சிகளைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஒருவர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கு பற்ற முடியும்.

கூட்டத்தில் பங்குபற்றும் மக்கள் பிரதிநிதியின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் போன்ற விவரங்களை உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அல்லது செயலர் முன்னரே பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டு கலந்து கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் மக்களின் வேறு பிரதிநிதி அந்தக் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழு சார்பாகப் பங்குபற்ற முடியும். அந்த நபரின் விவரங்களும் முன்னரே பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

## முஸ்லிம் பெண்களை சிரமப்படுத்தாதீர்கள்!

### மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை




கொழும்பு, மே 22

பொது இடங்களில் முஸ்லிம் பெண்களைச் சிரமத்துக்குள்ளாக்கும்வகையில் செயற்பட வேண்டாம்என்று பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் என்.டி. உடகம இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் முகத்தை முழுமையாக மறைக்கும் வகையிலான புர்கா உள்ளிட்ட ஆடைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பெண்களின் கலாசார உடையான ஹிஜாப்புக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை.

எனினும், ஹிஜாப் அணிந்து வருகின்ற முஸ்லிம் பெண்கள் பலர் பொது இடங்களுக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டு சிரமத்துக்கு உள்ளாக்கப்படுகின்றார் என்று முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவை மனித உரிமை மீறல் என்று அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## யாழ்ப்பாண மாவட்டத்தில்

# சமூகக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன

### அமைச்சின் செயலர் சிவஞானசோதி தெரிவிப்பு

கொழும்பு, மே 22

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதியுயர் பெறுபேறுகளைக் கொண்ட முன்னுரிமைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன. தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியமர்வு, மறுவாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி இதனைத் தெரிவித்தார்.

இதில் குருநகர் மீன்பிடித் துறைமுக நங்கூரமிடும் தளம் அபிவிருத்தி, யாழ்ப்பாணம் - அளவெட்டி அருணோதயக் கல்லூரி அபிவிருத்தி வேலைத்திட்டம், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கான அவசர உபகரணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வேலைத் திட்டம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றக் கட்டடத் தொகுதிகளும் இளைஞர் ஆளுமை விருத்திக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் என்பன உள்ளடங்குகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் குருநகர் மீன்பிடித்துறை நங்கூரத் தளம் 3ஆயிரத்து 117 கடற்றொழிலாளர் குடும்பங்களை உள்ளடக்கிய 10ஆயிரத்து 760 அங்கத்தவர்களைக் கொண்ட கடற்றொழில் மையம்.

இதில் 90 வீதமான மக்களின் வாழ்வாதாரம் கடற்றொழிலை மையமாகக் கொண்டுள்ளது. வருடாந்த மீன்பிடி உற்பத்தி 7ஆயிரத்து 390 மெற்றிக் தொன். மேலும் 562 மெற்றிக் தொன் கருவாடு உற்பத்திகளைக் கொண்ட கடற்றொழில் பொருளாதார வலயமாகவும் காணப்படுகின்றது. 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒருநாள் படகுகளும் படகுகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதுடன் 500க்கும் மேற்பட்ட ட்றோலர் படகுகள் ஆழ்கடலை நோக்கி மீன்பிடித் துறையில் ஈடுபடுகின்றன.

துறையின் அபிவிருத்திக்குக் கடற்கரை சார்ந்த மீன்பிடித் துறைக்கான வசதிகள் போதியளவு இல்லை.

குறிப்பாக ஏலமிடும் அறை, வலைபின்னும் நிலையம், குளிரூட்டல் வசதிகள், எரிபொருள் நிலையம், படகுகள் திருத்தும் தொழிற் பட்டறைகள் போன்றவை காணப்படாதமை இந்தத் துறையின் வளர்ச்சிக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது என்று குருநகர் பிரதேச மீன்பிடித் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இவை பற்றிய கலந்துரையாடலின் அடிப்படையில் ஏலமிடும் கட்டடத்தொகுதி, எரிபொருள் நிலையம், வலைபின்னும் நிலையம் உட்படச் சில உடனடித் தேவைகளை நிறைவு செய்வதற்கு உடனடியாக 33.83 மில்லியன் ரூபா கிரயத்தில் இந்தக் கருத்திட்டம் அனுமதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டம் மாவட்டச் செயலர் ஊடாக யாழ்ப்பாணப்பிரதேசசெயலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அருணோதயக் கல்லூரி தொடர்பாகப் பல் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய ஒன்றுகூடல் மண்டபம் மற்றும் வகுப்பறைகளையும் உள்ளடக்கிய இரண்டு மாடிக் கட்டடத்துக்கு 55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையை மேம்படுத்தும் வேலைத் திட்டத்துகபு 56 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மருத்துவ உபகரணங்களுக்கும், அறுவைசிகிச்சைப் பிரிவு மற்றும் நோயியல் ஆய்வுகூட சீரமைப்பு, குழந்தை பிரசவிப்புப் பகுதிக்கான வசதிகளும் விரிவாக்கல்க ளும் சாப்பாட்டு அறை அமைத்தல் மற்றும் நோயா ளர் பிரிவு, மகப்பேற்றுப் பிரிவு, பெண் நோயியல் பிரிவு உட்பட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட இளையோர் ஆளுமை விருத்திக்கான கட்டடத் தொகுதிகளும் வசதிகளுக்குமான வேலைத்திட்டத்துக்கு 50மில்லியன் ரூபா நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதில் தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கான மாவட்ட அலுவலகம், இளைஞர் பயிற்சிநிலையம், இளைஞர் விளையாட்டுத் திடல், இளைஞர்களுக்கான உள்ளகப் பயிற்சி வசதிகள், இளைஞர் கலாசார மண்டபம் உள்ளடங்கலாக 11ஆயிரம் இளையோருக்கு வசதிப்படுத்தும் வேலைத்திட்டமாக இது அமையும்.

யாழ்ப்பாண மாவட்ட இளையோர் ஆளுமை அபிவிருத்திக்கான கட்டடத் தொகுதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் அமையவுள்ளது என்று அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## வீதித்தடைகள் அகற்றம்

யாழ்ப்பாணம், மே 22

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகப் பருத்தித்துறை வீதியில் போடப்பட்ட வீதித் தடைகள் நேற்றுக் காலை அகற்றப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு முன்பாகச் செல்லும் வீதியில் வீதித் தடை கடந்த 17ஆம் திகதி தொடக்கம் போடப்பட்டது.

இந்தத் தடை நேற்றுக் காலை பொலிஸாரால் அகற்றப்பட்டது. ஆலயச் சுற்றாடலில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பதுகாப்பு தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. (ம-17)

## ஈருருளியில் ஆன்மிகச் சுற்றுலா

யாழ்ப்பாணம், மே 22

முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு ஈருருளி ஓட்ட வீரர்கள் ஈருருளிகளில் ஆன்மிகச் சுற்றுலாவை மேற்கொண்டனர்.

மூளாயைச் சேர்ந்த வை.கைலாநாதன் (வயது- 64), நவாலியைச் சேர்ந்த க.ராஜசேகரகம் (வயது- 53) ஆகிய இரண்டு மூத்த வீரர்களே அவ்வாறு பயணத்தை மேற்கொண்டனர்.

இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை 5 மணிக்கு சித்தங்கேணி சிவன்கோயிலில் இருந்து தமது பயணத்தை ஆரம்பித்தனர். (ம-17)

## வலி. தென்மேற்கில்

# குடும்பத் தகவல்கள் திரட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம், மே 22

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வகையில் மீண்டும் குடும்ப விவரத் தகவல் திரட்டுப் படிவம் ஊடாக விவரம் திரட்டப்படுகிறது.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளில் வீடு வீடாகச் சென்று தகவல்கள் திரட்டப்படுகின்றன.

சிறப்புத் தேவையுடையோர் விவரம், ஓய்வூதியர், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம், போர்ப்பாதிப்பு விவரம், பெண் தலைமைத்துவக் குடும்ப விவரம், வீட்டுத் தோட்டம், சுயதொழில் விவரம், வாகனத் தேவை குறித்த விவரம், சமுர்த்தி, கழகசேவை திணைக்களத்தால் வழங்கப்படும் கொடுப்பனவு உள்ளிட்ட விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

உரிய படிவங்கள் குடியிருப்பாளரால் மட்டுமே நிரப்பப்படவேண்டும் என்று பிரதேச செயலர் அறிவுறுத்தியுள்ளார். (த்-50)

## நாட்டில் எங்கு பிறந்திருந்தாலும்

# பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை யாழ்ப்பாணத்தில் பெறமுடியும்!

யாழ்ப்பாணம், மே 22

நாட்டில் எந்த மாவட்டத்தில் பிறந்திருந்தாலும் அவர்களுடைய பிறப்பு,இறப்புச் சான்றிதழ்களை யாழ்ப்பாண மாவட்டத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் பிறப்பு- இறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் அலுவலகத்தைச் சம்பிரதாய பூர்வமாக நேற்று திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னைய காலங்களில் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் பெறும் நடவடிக்கைகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலேயே முன்னெடுக்கப்பட்டு வந்தன. படிப்படியாக அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டதன் பின்னர் பிரதேச செயலகங்களுக்கு அந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. வடக்கு மாகாணத்தில் பிறந்தவர்கள் வடக்கில் எந்தப் பிரதேச செயலகத்திலும் பெறக்கூடிய ஏற்பாடுகள் முன்னரே இருந்திருந்தாலும், தற்போது, அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டதன் அடிப்படையில், நாட்டில் எந்த மாவட்டத்தில் பிறந்திருந்தாலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தச் செயற்றிட்டம் எமது மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது -என்றார். (ஐ)

# தமிழ் மாணவர்களின் கல்வியை ஹிஸ்புல்லா சீர்ழிக்கிறார்

## குற்றஞ்சாட்டி மட்டக்களப்பில் மாணவர்களால் கவனவீர்ப்பு

மட்டக்களப்பு, மே 22

கிழக்கு தமிழ் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு அந்த மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா பாதிப்பு ஏற்படுத்துகிறார் என்று குற்றஞ்சாட்டி அவருக்கு எதிராகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு, காந்தி பூங்கா முன்பாக முற்போக்குத் தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று நடத்தப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், அமைதியான முறையில் வாயில் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கிழக்கு தமிழ் மாணவர்களின் கல்வியைக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சி கிழக்கு மாகாண ஆளுநரின் ஒருபக்க பார்வையில் பாதிக்கப்பட்டது அப்பாவித் தமிழ் மாணவர்களே என்றும், போராட்டக்காரர் தெரிவித்தனர். (த)



# மணற்கொள்ளை அரசியல் வாதியின் செல்வாக்கில் மணல் அகழ்வு தீவிரம்!

## பொலிஸார், எஸ்.ரி.எப்பினர் கண்டுகொள்வதில்லை என்றும் இனியாவது தடுக்குமாறும் அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 22



மகிந்த ஆட்சியில் வடக்கில் மணல்கொள்ளையில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்படும் அரசியல்வாதியின் சகோதரனின் பெயரில் கிளிநொச்சி பூநகரி கௌதாரிமுனையில் மணல் அகழ்வு வரையறையின்றித் தொடர்கிறது.

அதைத் தடுத்து நிறுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி மறுக்கப்பட்டபோதும், மணல் அகழப்படுகிறது என்று அங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த காணி உரிமையாளரினதும்; கனியவளத் திணைக்களத்தினரினதும் அனுமதியை மாத்திரம் பெற்றுக்கொண்டே மணல் அகழ்வு இடம்பெறுகிறது. ஆனால் அங்கு மணல் அகழ்வதாயின் அந்தப் பகுதி உள்ளடங்கும் பிரதேச சபையின் ஒப்புதல் மற்றும் பிரதேச செயலக மற்றும் கரையோர பாதுகாப்புச் சபையின் அனுமதியும் பெற்றிருக்கவேண்டும் என்று பிரதேச செயலகத் தரப்பினர் கூறுகின்றனர்.

'மணல் அகழ்வால் கௌதாரிமுனையின் இயற்கை வளம் அழிகிறது. முன்னரும் அனுமதியின்றி மணல் அகழ்வு இடம்பெற்றது. வளம் பாதிக்கப்படுவது பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டது. அதனை ஆராய்ந்த மாவட்டச் செயலர், இதுபற்றிகுழுஅமைத்து ஆராய்ந்து இறுதியில் அனைத்தும் நிறுத்தப்பட்டன. இருப்பினும் தற்போது தமது அனுமதியின்றி கனியவளத்தினரினதும் காணி உரிமையாளரினதும் அனுமதியுடன் மணல் அகழ்வு இடம்பெறுகிறது' என்று பிரதேச செயலகத்தினர் கூறுகின்றனர்.

பொலிஸாரும் சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுபற்றி பூநகரிப் பிரதேச செயலர் கிருஸ்ணேந்திரனிடம் கேட்டபோது,

"பூநகரிப் பகுதியில் மணல் அகழ்வதற்குதமது காணியில்வழங்க இணக்கம் தெரிவித்தவர்களின் சிபார்சுகளுடன் 7 விண்ணப்பங்கள் அனுமதிக்காகஎம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றை ஆராய்ந்தவேளையில் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இதனையடுத்து அங்கே ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இவற்றுக்கு எமது ஒப்புதலை வழங்க முடியாது என்றே எழுத்தில் தெரிவித்தோம். இவை அனைத்துக்கும் அப்பால் தீர்மானத்தை மீறி கனிய வளத்தினரின் அனுமதியுடன் மட்டும் மணல் ஏற்றிச் செல்கின்றனர்" என்றார்.

பிரதேச செயலக செயலக அனுமதியின்றி மணல் ஏற்ற முடியாது என்றுள்ளபோதும் அதனையும் தாண்டி அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அவ்வாறு மணல் அகழப்படுகிறது. அந்தக் கட்சியினர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் வரையறையின்றி மணல் கொள்ளையில் ஈடுபட்டது. கொள்ளை விலையில் மக்களுக்கு விற்றுப் பணம் சம்பாதித்தது. அதன் தாக்கம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வடக்கில் சகல இடங்களிலும் பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் பூநகரியிலும் அரசியல் அடாவடியில் ஈடுபட்டுவருகிறார் அந்த அரசியல்வாதி. உரிய முறைப்படி அல்லாத மணல் அகழ்வை பொலிஸாரும் கண்டுகொள்வதில்லை. முப்படையினர், பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினரும் தற்போது பல இடங்களிலும் திடீர் சோதனை, சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரெனினும் உரிய முறையிலான அனுமதிகளைப் பெறாது சில அனுமதிகளை மட்டும் வைத்து மணல் அகழப்படுவதனை அவர்கள் தடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் அந்தப் பகுதி மக்கள், அவர்கள் இந்த விடயத்தில் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?. என்றும் கேட்கின்றனர்.

(த-105)



## நுண்கடன் நுகர்வோரை பாதுகாக்க விழிப்புணர்வு

கிளிநொச்சி, மே 22

நுண்கடன் நுகர்வோரைப் பாதுகாத்தல் எனும் செயற்றிட்டத்தின் கீழ் லிப்ட் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு நடவடிக்கையின் ஓர் அங்கமாக மக்கள் கூடும் இடங்களில் வீதி நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

இதன் ஆரம்ப நிகழ்வு வாழைச்சேனை கிண்ணையடி மற்றும் கறுவாக்கேணி கிராமங்களில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நுண்கடன் வசதிகள் எமது வாழ்வைக் கட்டியெழுப்ப எவ்வாறு பயன்படுகின்றன என்பது தெளிவு படுத்தப்பட்டதுடன் நுண்கடன் வசதிகளைத் தவறாகப் பயன்படுத்தினால் எவ்வாறான பாதிப்புகளை அது ஏற்படுத்தும் என்பது பற்றியும் விளக்கப்பட்டது. இதன்போது பார்வையாளர்களுக்குத் துண்டறிக்கைகளும் விநியோகிக்கப்பட்டன.

(த)



### ஈஸ்ரர் தாக்குதலை காரணமாகக் கூறி

## ஒரு சமூகத்தை துன்புறுத்தாதீர்

### மன்னார் நகர சபை தவிசாளர் தெரிவிப்பு

மன்னார், மே 22


தற்கொலைக் குண்டுத் தாக்குதலை வைத்துக்கொண்டு நாம் ஒரு போதும் ஒரு சமூகத்தை மென்மேலும் துன்பப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது என்று மன்னார் நகர சபை முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் 15ஆவது அமர்வு சபையின் சபா மண்டபத்தில் நேற்று முற்பகல் நடை பெற்றது. கடந்த மாதம் 21ஆம் திகதி நாட்டில் நடைபெற்ற குண்டு தாக்குதல்களில் உயிரிழந்த மக்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது: குண்டுத் தாக்குதல் சம்பவத்தை வைத்துக் கொண்டு நாம் ஒரு சமூகத்தை பகைத்துக்கொண்டு அவர்களை மென்மேலும் துன்பப்படுத்துகின்ற வகையில் செயற்படக்கூடாது. இலங்கையிலே அனைத்து மத மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். குழப்பத்தை ஏற்படுத்துகின்றவர்களை இனங்கண்டு அவர்களுக்கு நாம் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். ஆட்சி செய்கின்றது பெரும்பான்மைச் சமூகம் தான். ஆனால் சிறுபான்மை சமூகங்களாகிய நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு அவர்களுக்கு நாங்கள் பதிலடி கொடுக்க வேண்டுமே தவிர அதனை வைத்துக்கொண்டு ஒரு போதும் ஒரு சமூகத்தை நசுக்கக் கூடாது - என்றார்.

(த-56)





## கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்ற வெசாக் நிகழ்வு

கிளிநொச்சி,மே 22

கிளிநொச்சியில் வெசாக் தின நிகழ்வு கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரு நாள்கள் மிகச் சிறப்பாக இடம்பெற்றன.

கிளிநொச்சி படைகளின் கட்டளையகத்தின் 57 ஆவது படைப்பிரிவும், தேசிய பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் மகா சம்மேளனமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

கிளிநொச்சி தர்மபுரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வை கிளிநொச்சி படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சவிப்பிரிய ஆரம்பித்து வைத்தார்.

வெசாக் கூடுகளால் மைதானம் அலங்கரித்துக் காணப்பட்டதுடன் வெசாக் பக்தி கீதங்களும் இசைக்கப்பட்டன.

நிகழ்வில் 57 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ-6)

## தூய அடைக்கல அன்னை ஆலயம் திறப்பு

மன்னார்,மே 21





மன்னார் மறை மாவட்டம் மாவிலங்கேணி கிராமத்தில் தூய அடைக்கல அன்னை ஆலயம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப் பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் எப்.எல். இம்மனுவல் பெர்னான்டோ ஆண்டகையால் திறந்து வைக்கப் பட்டது.

அதனைத்தொடர்ந்து ஆயரின் 71 ஆவது பிறந்த நாள் நிகழ்வும் ஆலய மக்களால் கொண்டாடப்பட்டது.

இதன் போது மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், பங்கு மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-56)



வவுனியா நெளுக்குளம் கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழான் இறுதிநாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது ஆலய சபையினரின் அழைப்பின் பேரில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் கலந்து கொண்டார்.

(ஐ-213)

# ஈஸ்ரர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு ஒரு மாதம் நிறைவில் அஞ்சலிகள்


கிளிநொச்சி அரச பேருந்து சாலையில்


வவுனியா இ.போ.ச சாலையில்


சாவகச்சேரி பொதுச்சந்தை அஞ்சலி அரங்கில்

யாழ்ப்பாணம், மே 22
பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு ஒருமாத நிறைவை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் நேற்று பல்வேறு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஈஸ்ரர் தினத்தில் மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள், மூன்று நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் சுமார் 257 பேர் உயிரிழந்ததுடன், 500க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்நிலையில், இலங்கை மக்கள் மத்தியில் அச்ச நிலைமை தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றது. இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், பௌத்த விகாரைகள் மற்றும் இஸ்லாமிய பள்ளிவாசல்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு கடும் பாதுகாப்புக்கு மத்தியிலேயே பொதுமக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான அச்ச நிலைமை தொடர்கின்ற நிலையில், பயங்கரவாத தாக்குதல்களின் ஒரு மாத பூர்த்தியினை நினைவுகூரும் முகமாக நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை காலை 8:45 மணிக்கு வடக்கு மாகாணத்தின் அனைத்து சமய வழிபாட்டுத் தலங்களிலும் மணியோசை ஒலிக்க செய்வதுடன் ஒரு நிமிட மௌன அஞ்சலியையும் மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அனைத்து சமயத் தலைவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கு அமைவாக நாட்டின் பல பாகங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. மிருசுவில் புனித நீக்கிலஸ் ஆலயத்தில் நேற்று அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்துகொண்டார். சாவகச்சேரி பொதுச்சந்தையில் அமைக்கப்பட்ட சிறப்பு நினைவஞ்சலி அரங்கில் அஞ்சலி செலுத்தப்பட்டது. சாவகச்சேரி நகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சாவகச்சேரி வீரபத்திரர் ஆலய முதன்மைக் குருக்கள், சாவகச்சேரி லிகோரியார் தேவாலய பங்குத்தந்தை, சாவகச்சேரி ஜும்மா பள்ளிவாசல் மௌலவி, நாவற்குழி விகாரையின் விகாராதிபதி ஆகியோருடன் சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், உப தவிசாளர் பாலமயூரன், உறுப்பினர் பௌலினா சுபோதினி, சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன் உட்பட பலரும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

வவுனியாவிலுள்ள பெரும்பாலான சமய வழிபாட்டுத் தலங்களிலும் நேற்றுக் காலை 8:45 மணியளவில் மணியோசை ஒலிக்க செய்யப்பட்டதுடன் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

இலங்கை பொதுஜன போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா இ.போ.ச சாலையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி அரச பேருந்து சாலையிலும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. குறித்த நிகழ்வு காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது. கிளிநாச்சி சாலையில் உள்ள ஊழியர்கள் இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு. செய்திருந்தனர்.


மிருசுவில் புனித நீக்ளஸ் ஆலயத்தில்

கொழும்பு சுதந்திர சதுக்கத்திலும் நேற்றுக் காலை ஒன்றுகூடிய மக்கள் அங்குள்ள தடாகத்தில் மலர்களை தூவி, மெழுகுவர்த்தி ஏற்றினர். அதன் பின்னர், உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி ஒரு நிமிட அஞ்சலி செலுத்தினர். மட்டக்களப்பிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ-7,ரி1,110,6)

# குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு யாழ்ப்பாண முஸ்லிம் சமூகத்தால் அஞ்சலி

## தாக்குதலை மேற்கொண்ட நாசக்காரக்கும்பல் தண்டிக்கப்படவேண்டும் என்றும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 22
மட்டக்களப்பு மற்றும் கொழும்பு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

இந்த அஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் உள்ள பெரியமாஹறதீன் ஜிம்மாப் பள்ளிவாசலில் நேற்றுக்காலை 9.45 மணிக்கு இடம்பெற்றது.



கடந்த மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற ஈஸ்ரர் தினத்தின் போது, கத்தோலிக்க தேவாலங்கள், ஹோட்டல்களை இலக்கு வைத்து இஸ்லாம் கடும்போக்கு தீவிரவாத கும்பல் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அரங்கேற்றியிருந்தது. அந்தத் தாக்குதல்கள், ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பில் பயிற்சி பெற்ற இலங்கையைச் சேர்ந்த இஸ்லாம் கடும்போக்கு வாதக் கும்பலே மேற்கொண்டது என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு உரிமை கோரியிருந்தது. அந்தத் தாக்குதலால் சுமார் 257க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். 500க்கும் மேற்பட்ட மக்கள் படுகாமடைந்திருந்தனர். தாக்குதலின் பின்னர், அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டு, அதன் மூலம் இலங்கையில் உள்ள ஒட்டு மொத்த முஸ்லிம் மக்களும் பாதிப்புக்களுக்கு உள்ளானார்கள். அரசு, மற்றும் மக்கள் முஸ்லிம் சமூகத்தை சந்தேகக் கண் கொண்டு நோக்கும் சூழல் உருவாக்கப்பட்டது. அது தொடர்பில் முஸ்லிம் மக்கள் கவலைகளையும், ஆதங்கங்களையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

தாக்குதல் நடைபெற்று ஒருமாதம் நிறைவில் நேற்று தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கொல்லப்பட்டவர்களுக்காக முஸ்லிம்கள் வழிபாடுகளை மேற்கொண்டனர். தாக்குதலை மேற்கொண்டவர்களை அவர்கள் கடுமையாக எச்சரித்தனர்.

'இந்த நாசகாரத் தாக்குதல்களை மேற்கொண்ட எவராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். முஸ்லிம் மார்க்கத்தில் இல்லாத ஒரு செயலை அவர்கள் அரங்கேற்றியுள்ளனர். இதனால் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். தற்போது முஸ்லிம் மக்களுக்கு அவப்பெயரை அந்தக் கும்பல் ஏற்படுத்திவிட்டது. மக்கள் அனைவரும் முஸ்லிம்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். அப்படி பார்க்க வேண்டாம். முஸ்லிம்கள் எல்லோரும் அப்படிப் பட்டவர்கள் அல்ல. அனைத்து முஸ்லிம்களும் தாக்குதலைக் வன்மையாகக் கண்டிக்கிறார்கள். எனவே எவராக இருந்தாலும், நீதியின் முன் கொண்டுவரப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்' என்று யாழ்ப்பாணம் பெரியமாஹறதீன் ஜிம்மாப் பள்ளிவாசல் தலைவர் சுருள் அனாம் உதயனுக்குத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த பள்ளிவாசல் மௌலவி ஜ.எம்.ஸனூஸ், தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கும், இஸ்லாமுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றுதான் கூறவேண்டும். ஏனென்றால் அவர்கள் இஸ்லாம், அதனுடைய மார்க்கத்தைப் பற்றி சரியாக அறிந்து கொள்ளவில்லை. அதனால்தான் அவர்கள் இந்தத் தாக்குதலைச் செய்துள்ளார்கள். எங்களுடைய உலமாக்கள் சபை அவர்களுடைய உடல்களை, உடைகளைக் கூடப் பொறுப்பேற்கவில்லை ஏனென்றால் அவர்கள் மார்க்கத்தில் இல்லா பயங்கரமான பாவத்தைச் செய்துள்ளார்கள். எங்களுடைய மார்க்கம் அடுத்தவர்களை வாழ வைப்பது, அடுத்தவர்களுக்கு வாழ்வளிப்பதாகவே உள்ளது. இந்தப் பாவத்தைச் செய்தவர்கள் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைய தண்டிக்கப்படவேண்டும் என்று அரசிடம் வேண்டிக் கொள்கிறோம். இவர்களை வைத்துக் கொண்டு ஏனைய சமூகத்தினர் முஸ்லிம்கள் அனைவரையும் பிழையானவர்களாகப் பார்ப்பதை நாம் விரும்பவில்லை. எல்லா முஸ்லிம்களையும் தவறாக எண்ண வேண்டாம் என்று அனைத்துச் சமூகத்தவரையும் நான் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ஐ-21)


# மன்னாரில் விருது விழா தொடர்பான கருத்தமர்வு

மன்னார், மே 22
தேசிய ரீதியில் இடம்பெறவுள்ள இளைஞர் விருது விழாவில் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கிலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கட்டமைப்பு தொடர்பாகவும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நாடளாவிய ரீதியிலான வேலைத்திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் தெளிவுபடுத்தும் கருத்தமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் பிரதேச செயலக மண்டபத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மன்னார் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ரி. பூலோகராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வன்னி மாகாணப் பணிப்பாளர் என்.எம். முனவ்பர், விருந்தினர்களாக மன்னார் மாவட்ட உதவிப்பணிப்பாளர் எம். மஜித் தேசிய, இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய பிரதி நிதிகளான ஜோசப் நயன், சோதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-56)

# தப்பியது ரணிலின் பதவி

## அவருக்கு எதிரான மனு நிராகரிப்பு



கொழும்பு, மே 22

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இல்லாமல் செய்து உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் மேற்படி மனு நேற்றுச் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சர்மிலா கோனவலவால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க தமது குடும்ப நிறுவனமான லேக்ஹவுஸ் பிரிண்டர்ஸ் மற்றும் பப்ளிஷர்ஸ் தனியார் நிறுவனத்தின் பிரதான பங்குதாரர் என்பதுடன், அந்த நிறுவனத்தின் தனிப்பட்ட இலாபத்தைக் கருத்திற்கொண்டு சில அரச நிறுவனங்களுடன் அவர் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்புக்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினரொருவர் அரசுடன் வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியாது என்று சுட்டிக்காட்டி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ஒ.5)

# முக்கிய நியமனங்களில் வெளிநாட்டுத் தலையீடு

## மகிந்த குற்றச்சாட்டு



கொழும்பு, மே 22

இலங்கையில் சில முக்கிய பதவிகளுக்கான நியமனங்களில் வெளிநாடுகளின் தலையீடுகள் இருப்பதாக, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச குற்றம்சாட்டியுள்ளார்.

அபேராமய விகாரையில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், இலங்கையில் வெளிநாடுகளின் தலையீடுகள் கடுமையாக உள்ளன. சில நியமனங்களை செய்யும் போது வெளிநாட்டு தலையீடுகள் இருக்கிறது என்ற உண்மை எனக்குத் தெரியும். குறிப்பிட்ட சிலர் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் என்றும் ஏனையவர்களை நிராகரிக்குமாறும் அவர்கள் கூறுகிறார்கள்.

இதற்கு அரசு அனுமதித்துள்ளது. இது நிறுத்தப்பட வேண்டும். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கையில் முகாமிட முயற்சிப்பதாக செய்திகள் வெளியாகின்றன. ஆனால், அதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பல்வேறு முயற்சிகள் [illegible] பெற்றது உண்மை. ஆனால், அத்தகைய உடன்பாடு [illegible] அரச தலைவர் மைத்திரிபால கூட, கையெழுத்திட முடியாது என்று கூறி விட்டார், என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

# இலங்கை அரசுடன் இரகசிய பாதுகாப்பு உடன்பாடு இல்லை

## சீனா திட்டவட்டம்

கொழும்பு, மே 22

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு உடன்பாடுகள், பாதுகாப்புக் கருவிகள் விநியோகம் மற்றும் இராணுவத்தினருக்கான பயிற்சிகள் போன்ற அடிப்படை காரணிகளை மாத்திரமே உள்ளடக்கியிருப்பதாக, சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் சீனாவுக்குச் சென்றிருந்த போது, இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு உடன்பாடுகளில் கையெழுத்திட்டிருந்தார்.

இந்த பாதுகாப்பு உடன்பாடுகள் குறித்து பல்வேறு தகவல்களும் வெளியாகியிருந்த நிலையில், கொழும்பில் உள்ள சீன தூதரக பேச்சாளர், விளக்கமளித்துள்ளார்.

'சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கருணாசேன கொடிதுவக்கு, நீதியமைச்சர் தலதா அத்துகோரள, அமைச்சர் தயா கமகே ஆகியோர் முன்னிலையில் இந்த உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டன.

கையெழுத்திடப்பட்ட உடன்பாடுகள் இரகசியமாக மூடி மறைக்கப்படவில்லை. இலங்கை தொடர்பான சீனாவின் கொள்கை நிலையானது. அதே கொள்கைளைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம்.

இந்த பாதுகாப்பு உடன்பாடுகளின் அடிப்படையில் இலங்கையில் சீனா தனது புலனாய்வு சேவைகளை நிறுத்தவுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களையும் அவர் நிராகரித்துள்ளார். (ஒ.5)

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இலக்கு இலங்கையல்ல

## அமெரிக்கா புதுத் தகவல்



கொழும்பு, மே 22

குண்டுத் தாக்குதல்களை நடத்துவதற்குஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இலங்கையைத் தெரிவு செய்யவில்லை. மாறாக இலங்கையில் இயங்கும் குழுவொன்றே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை தெரிவு செய்துள்ளதென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக அமெரிக்காவின் கொள்கை ஆராய்ச்சி நிறுவனங்களில் ஒன்றான ராண்ட் கோப்ரேசனின் அயலுறவுக் கொள்கை நிபுணரான ஜோனா பிளான்க் இலங்கை ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த தாக்குதலை நடத்துவதற்கு இஸ்லாமிய இயக்கமொன்றைத் தெரிவுசெய்து வேறொரு நாட்டில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புதாக்குதல் நடத்தியிருக்க முடியும். ஆனால் இடம்பெற்ற தாக்குதல்கள் அனைத்துக்கும் இலங்கையைச்சேர்ந்தவர்களே காரணமாக உள்ளமையால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை இங்குள்ள இயக்கமொன்றே தெரிவு செய்திருக்க வேண்டும் என்பது உறுதியாகின்றது.

மேலும் தாக்குதலை நடத்துவதற்கான பயிற்சிகளையும் உபகரணங்களையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடமிருந்தே அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

இதேவேளை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியஇருவரும்இணைந்து செயற்படாவிடின் நாட்டு மக்களின் பாதுகாப்பை ஒருபோதும் உறுதிப்படுத்த முடியாது - என்றார். (ஒ.5)

# புர்க்கா, நிக்காப்களுக்கு தடைவிதிப்பு

கொழும்பு, மே 22

புர்க்கா மற்றும் நிக்காப்களுக்கு தடைவிதித்து அரநாயக்க பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மகிந்த அணியான, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி உறுப்பினர் சுரவீர கொண்டு வந்த தீர்மானத்தை மற்றுமொரு உறுப்பினரான ரிபாய் வழிமொழிந்தார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக அரநாயக்க பகுதியில் முஸ்லிம் பெண்கள் புர்க்கா மற்றும் நிக்காப் அணியவேண்டாமென சபை வலியுறுத்தியது. சபை அதன் தலைவரான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் நிஹால் செனெவிரத்னவின் தலைமையில் நேற்றுக் கூடியபோது தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. (ஒ.5)



# பாடசாலைகளின் பாதுகாப்பு நோட்டம் விட்டார் மகிந்த

கொழும்பு, மே 22

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச நேற்றுக் காலை கொழும்பில் உள்ள பிரதான பாடசாலைகளுக்குத் திடீரெனச் சென்றார். அங்கு அதிபர்களைச் சந்தித்து பாதுகாப்பு நிலமைகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

'மாணவர்களின் வருகை பாதுகாப்பு காரணங்களால் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பாதுகாப்பு குறித்து நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதன் காரணமாகவே நான் பாடசாலைகளுக்கு வந்தேன்' என்று இதன்போது மகிந்த தெரிவித்துள்ளார். (ஒ.5)

# எமது திட்டங்களுக்கு பாதுகாப்பு வழங்குங்கள்

## சீனாவும், இந்தியாவும் இலங்கையிடம் வலியுறுத்து



கொழும்பு, மே 22

இலங்கையில் தமது திட்டங்கள் மற்றும் நிலைகளுக்கான பாதுகாப்பை வழங்குமாறு சீனா மற்றும் இந்திய அரசுகள் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம், ஈஸ்ரர் ஞாயிறன்று குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிய சங்ரிலா விடுதி ஆகியவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சீன அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேபோன்று இலங்கையில்தாம் முன்னெடுக்கின்ற திட்டங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு இந்திய அரசும் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை, கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகமும், உள்நாட்டு பாதுகாப்புத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த இரண்டு மூத்த அதிகாரிகளைப் பணியில் அமர்த்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பாக நாளிதழ்களில் விளம்பரத்தை பிரசுரித்து, ஆள் சேர்ப்புச்செய்வதற்கும்முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ.5)

# சாத்தான்களிலே ஓரளவு நல்ல சாத்தான் கோத்தா

## சான்று கொடுக்கிறார் விக்கிரமராச்சி



கொழும்பு, மே 22

அரசின் மீது மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ள சூழ் நிலையில் நாட்டை சரியான பாதையில் நிர்வகிக் கின்ற தலைமைத்துவம் ஒன்றே தற்போதைய தேவை. அரசி யல்வாதிகளாக இருக்கின்ற சாத்தான்களிலே கோத்தபாய ராஜபக்ச ஓரளவு சிறந்த சாத்தான் என்றே கூறவேண்டும். இவ்வாறு பூகோள இலங்கையர் ஒன்றியத்தின் தலைவர் சியா மேந்திர விக்கிரமாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் அவருக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றினார். நாட்டின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அவரது செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்திருந்தன.

அத்தகையதொரு தலைமைத்துவமே தற்போதைய தேவையாகும்.

நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதல்களை அடுத்து நாட்டின் பாதுகாப்பு முழுவதும் இராணுவத்தினரின் கைகளிலேயே இருக்கின்றது. தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான ஸஹ்ரானின் மனைவி மற்றும் பிள்ளையைக் கூட எமது இராணுவம் தான் காப்பாற்றியது.

இராணுவத்தினரை சிங்களவர்கள் என்று பொதுமைப்படுத்துவது தவறாகும். தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என்று அனைத்து இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரும் இராணுவத்தில் பணியாற்றுகின்றனர். அதே போன்று கடந்த காலத்தில் அவர்கள் தமிழர்களுக்கெதிராகப் போரிடவில்லை. மாறாக பயங்கரவாத இயக்கம் ஒன்றிற்கு எதிராகவே போரிட்டார்கள். எதிரியையும் நண்பனாக நோக்குகின்ற மிகவும் ஒழுக்கமான இராணுவம் எமது நாட்டில் இருக்கின்றது - என்றார். (ஒ.5)

## பெரேரா கொலை குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

கொழும்பு, மே 22

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்பட பலர் தற்கொலைப் படைத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டாவது குற்றவாளி ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 31 பேர் அநுராதபுரத்தில் கடந்த 2008ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைப் படைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். (ஒ.5)

## ஐ.தே.கவையே சிறுபான்மையினர் தேர்தலில் ஆதரிப்பார்கள்

### அமைச்சர் ஹரிசன் நம்பிக்கை



கொழும்பு, மே 22

சிறுபான்மை மக்களின் முழு ஆதரவும் அரசுக்கே கிடைக்கும். அதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. ஆனால் நாட்டில் வன்முறைகளைத் தூண்டி சிறுபான்மை மக்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்தி தனிப்பட்ட எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்ளவே எதிரணியினர் முயற்சிக்கின்றனர். இதனூடாக எதிர்வரும் அரச தலைவர் தேர்தலை வெற்றிக்கொள்வது அவர்களின் நோக்கமாக இருந்தால் அது கனவாகவே அமையும். இவ்வாறு அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.தே.க. என்பது சகல சமூக மக்களுக்கும் ஏற்புடைய வகையில் கட்டியெழுப்பப்பட்டதாகும். ஆகவே தேவையான பலத்தை ஒன்றிணைந்து பெற்றுக் கொள்ள முடியும் என்ற எதிர்ப்பார்ப்பும் எமக்கு உள்ளது.

அதேபோன்று நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அரசுக்கு எதிராக திசை திருப்பவே எதிரணியினர் முயற்சிக்கின்றனர். வன்முறைகள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் எதிர்வரும் ஒருசில தினங்களில் உண்மையான குற்றவாளிகள் யார் என்பது வெளியாகும் - என்றார். (ஒ.5)

## கோத்தாவின் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, மே 22

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கு கொழும்பு சிறப்பு நீதாய மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு, நாளை வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சம்பத் அபேகோன், சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

கோத்தபாய ராஜபக்ச நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் ஜூன் மாதம் 2ஆம் திகதி வரை மருத்துவ தேவைக்காக வெளிநாடு செல்ல அனுமதி வழங்குமாறு அவரது சட்டத்தரணி அலி சப்ரி நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கு அரச தரப்பு சட்டத்தரணி எதிர்ப்பு தெரிவிக்காத நிலையில், அது தொடர்பில் நாளை ஆராய்ந்து பார்ப்பதாக நீதிமன்றம் கூறியுள்ளது.

அத்துடன் அன்றைய தினம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்கும் திகதி தொடர்பான தீர்மானத்தை அறிவிப்பதாகவும் நீதிபதிகள் குழாம் அறிவித்துள்ளது.

டீ.ஏ. ராஜபக்ச நினைவுத் தூபி மற்றும் நூதன சாலை அமைப்பதற்கு 90 மில்லியன் ரூபா அரச நிதியைப் பயன்படுத்தியதாக கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்ட 7 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, மே 22

2019ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். எதிர்வரும் 31ஆம் திகதி வரையிலும் விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்று அவர் கூறினார்.

பாடசாலை மற்றும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் குறித்த காலத்தில் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தொடர்பான எஸ்.எம்.எஸ். வைத்திருந்தவர் கைது

கொழும்பு, மே 22

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு குறித்த குறுந்தகவலொன்றை (எஸ்.எம்.எஸ்.) தனது கையடக்கத் தொலைப்பேசியில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞனை எல்ல பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

எல்ல பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலொன்றையடுத்து எல்ல நகரில் இளைஞரொருவரைக் கைது செய்த பொலிஸார், இளைஞனின் கையடக்கத் தொலைப்பேசியைச் சோதனை செய்த போது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு குறித்த குறுந்தகவலொன்று இருப்பதாகத் தெரிவித்து அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் தொடர்ந்தும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றான். குறித்த குறுந்தகவலை அனுப்பிய மேலுமொரு இளைஞரையும், கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ,5)

## ரிசாத்தை தோற்கடிக்கலாம்

### வெல்கம நம்பிக்கை

கொழும்பு, மே 22

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வெற்றிகொள்ள முடியும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கூறியுள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

'விரைவாக அரச தலைவர் தேர்தல் நடத்துவதே சிறந்தது. அமைச்சர் மங்கள சமரவீரவால் இந்த நாடு பௌத்தர்களின் நாடு அல்ல என்று கூறப்பட்டிருந்த போதிலும், கார்தினால் அவர்களால் அமைச்சரின் கூற்று பொய்ப்பிக்கப்பட்டுள்ளது' என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.5)

## நாலக டி சில்வா பிணையில் விடுவிப்பு

கொழும்பு, மே 22

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவை பிணையில் விடுதலை செய்ய கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரது கொலை திட்டம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட ஒலிப்பதிவு சம்பவம் தொடர்பில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 25ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்தார். இந்த நிலையில் நீண்ட காலத்தின் பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

நாலக டி சில்வா மீது குற்றச்சாட்டை சுமத்துவதில் பிரதானமாகச் செயற்பட்ட நாமல் குமார பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## நவ.15 – டிசெ.7 இடையில் அரச தலைவர் தேர்தல் நிச்சயம்



கொழும்பு, மே 22

எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் இந்த வருட இறுதியில் நடத்தப்படுவது உறுதி என்று தேர்தல் ஆணைக்குழு தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.


நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் டிசெம்பர் 7 ஆம் திகதிக்குள் நடத்தப்படும் என்று அவர் உறுதிபட தெரிவித்துள்ளார்.

'அரசமைப்பின் படி அரச தலைவரின் காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அரச தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டும். வேட்புமனு தாக்கல் செய்வதற்கு 15 நாள்களுக்கு முன்னதாக தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் தேர்தலுடன் சம்பந்தப்பட்ட விடயங்க ளில் சட்டமன்றம், நிறைவேற்று அதிகாரி அல்லது அரசிடம் ஆலோசனை பெறவேண்டிய கட்டாயம் தேர்தல் ஆணையத்துக்கு இல்லை. அந்தவகையில் அரச தலைவர் தேர்தலை சுதந்திரமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் நடத்த தேர்தல்கள் ஆணையம் எதிர்பார்த்துள்ளது.

மேலும் தேர்தல் நடைபெறும் தினம் மற்றும் தேர்தல் பரப்புரைக் காலம் ஆகியவற்றை ஒக்ரோபர் நடுப்பகுதியில் அறிவிக்கப்படும்.

ஆனால் அரச தலைவர் தேர்தலை அரச விடுமுறை தினத்தில் நடத்த முடியாது, என்றும் கூறியுள்ளார். (ஒ,5)



இஸ்ரேல் - பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு இடையிலுள்ள காசா நகரில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களால் அழிக்கப்பட்ட கட்டட இடிபாடுகளுக்கு அருகில் புனித மாதமான ரம்ழானின் போது இப்தார் உணவருந்தி விரதத்தை நிறைவு செய்கின்றனர் அந்தப் பகுதி மக்கள்.

# போரிட விரும்பினால் ஈரான் அழிந்து விடும்

## கீச்சகத்தில் ட்ரம்ப் எச்சரிக்கைப் பதிவு

வோஷிங்டன், மே 22

அமெரிக்காவுடன் ஈரான் போரிட விரும்பினால், அத்தோடு ஈரான் முடிந்து விடும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார். அமெரிக்கா மீது ஈரான் தாக்குதல் நடத்த எண்ணினால் அத்தோடு ஈரானின் கதை முடிந்து விடும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார். "ஈரான் எங்களுடன் போரிட விரும்பினால், ஈரான் அதோடு முடிந்து விடும். அமெரிக்காவை மீண்டும் அச்சுறுத்த முடியாது" என்று அவர் பதிவிட்டார். பதிலுக்கு இதுபோன்ற மிரட்டல்கள் விடுத்து ஈரானை ஒன்றும் செய்ய முடியாது என்று ஈரானின் அயலுறவு அமைச்சர் மொஹமத் ஜாவத் சாரிவ்ப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார்.

**பின்னணி**

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா, விலகுவதாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது. குறித்த அணு ஆயுத ஒப்பந்தத்தில் பிற நாடுகளின் ஆதரவுடன் ஈரான் தொடர்ந்து வருகிறது. இதில் விதிமுறைகளைப் பின்பற்ற முடியாது என்று ஈரான் சமீபத்தில் கூறியது. அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே மோதல் அதிகரித்தது.

சில நாள்களுக்கு முன்பு வளைகுடா நாடுகளுக்கு ஏவுகணை அமைப்புகளையும், போர்கப்பலையும் அமெரிக்கா அனுப்பி வைத்தது. வளைகுடா பகுதியில் உள்ள அமெரிக்க இராணுவம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சுறுத்தல் எழுந்திருப்பதால், ட்ரம்ப் நிர்வாகம் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகக் கூறப்பட்டது.

ஈரானை அணு ஆயுதங்கள் தயாரிக்க விடமாட்டோம் என்றும் ஆனால், அந்த நாட்டுடன் போரிட விரும்பவில்லை என்று ட்ரம்ப் தெரிவித்தார். ஐக்கிய அரபு இராச்சியத்தின் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான கப்பல்கள் சேதப்படுத்தப்பட்டன.

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் அரச அலுவலகங்கள் மற்றும் அமெரிக்க தூதரகம் இருக்கும் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ரொக்கெட் ஏவப்பட்டதாக ஈராக் இராணுவம் தெரிவித்தது. அமெரிக்க ஊழியர்கள் அனைவரையும் ஈராக்கை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டது. மத்திய கிழக்கில் பரவியிருக்கும் இத்தகு சூழல்களால் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான முறுகல் நீடித்து வருகிறது.





## இந்தோனேசிய அதிபர் தேர்தல்


# மீண்டும் வென்றார் ஜோகோ விடோடோ

ஜகார்த்தா, மே 22

இந்தோனேசியாவில் நடந்த அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றுத் தனது பதவியைத் தக்க வைத்தார் ஜோகோ விடோடோ (வயது 57). அவர் வெற்றி பெற்றமையை அந்த நாட்டுத் தேர்தல் ஆணையகம் நேற்று அதிகார பூர்வமாக அறிவித்தது. குறித்த தேர்தல் கடந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றது.

தற்போது அதன் வாக்குகள் எண்ணும் பணி முடிவடைந்ததையடுத்து, ஜோகோ விடோடா வெற்றிபெற்றதாகத் தேர்தல் ஆணையகம் அறிவித்தது.

விடோடோவுக்கு 55.5 சதவீத வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி, ஜெனரல் பிரபாவோ சுபியாந்தோவுக்கு 44.5 சதவீத வாக்குகளும் கிடைத்ததாக அந்த நாட்டுத் தேர்தல் ஆணையகம் மேலும் அறிவித்தது. தேர்தலில் மோசடி நடவடிக்கைகள் அதிகம் இடம்பெற்றதாகப் பிரபாவோ குற்றஞ்சாட்டியதன் காரணமாக, இந்தத் தேர்தல் முடிவுகளை எதிர்த்து அவர் நீதிமன்றில் மேல்முறையீடு செய்யக்கூடும் என்றும் கருதப்படுகிறது.



# அமெரிக்கப் போர்க் கப்பலால் தென் சீனக் கடலில் பதற்றம்

நியூயோர்க், மே 22

அமெரிக்கா சீனா இடையே வர்த்தக மோதல் வலுத்து வரும் சூழலில் தென் சீனக் கடலில் சர்ச்சைக்குரிய தீவுப் பகுதிக்கு அருகே அமெரிக்கப் போர் கப்பல் சென்றது. இது அங்கு பதற்றமான சூழ் நிலையை உருவாக்கியது. அமெரிக்கப் போர்க் கப்பலான 'பிரபெல்' கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தனது பணியை மேற்கொண்டது' என்று இது குறித்துத் தெரிவித்தது அமெரிக்கா இராணுவம். கடந்த மாதத்தில் தென் சீனாக் கடல் பகுதியில் அமெரிக்கப் போர்க்கப்பல் இதே மாதிரியான

நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் குற்றச்சாட்டப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் தென் சீன கடலில் அமெரிக்க கப்பல் இனம் காணப்பட்டிருப்பது சீனா - அமெரிக்கா இடையேயான மோதல் போக்கை அதிகப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இன்றைய நாள்

**மேடம்:** எதிர்வரும் பணிகளுக்கு முன்னேற்பாடு அவசியமாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணப்பரிவர்த் தனையில் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும்.

**இடபம்:** தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபட வேண்டாம். நண்பர்கள் உங்கள் உதவியை எதிர்பார்த்திடுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராக இருக்கும். சேமிப்பு பணத்தை செல வுக்கு பயன்படுத்துவீர்கள்.

**மிதுனம்:** நியாயம், தர்மத்துடன் செயல்படுவீர்கள். இஷ்ட தெய்வ அருள் துணை நின்று உதவும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கடகம்:** நண்பரிடம் முன்னர் கேட்ட உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவு திருப்திகரமான அளவில் வந்து சேரும்.

**சிம்மம்:** பகைமை குணம் உள்ள ஒருவர் பரிகாசத்துடன் பேசுவார். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடையக் கூடுதல் கால அவகாசம் தேவைப்படும்.

**கன்னி:** நியாயப்படி நடப்பதால் நன்மை உருவாகும். தொழில், வியாபாரத்திற்கு கூடுதல் மூலதனம் தேவைப்படும். பிறர் பார்வையில் தெரியும்படி பணத்தை தாராளமாக செலவு செய்வதை தவிர்க்கவும்.

**துலாம்:** குடும்ப பெரியவர்களின் வழிகாட்டுதல்படி செயல்படுவதால் அனுகூல சூழ்நிலை உருவாகும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாய பணவரவில் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

**விருச்சிகம்:** சுற்றுப்புற சூழல் தொந்தரவு தருவதாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத் தன்மையை பாதுகாப்பது நல்லது. குறைந்த அளவில் பண வரவு உண்டு.

**தனுசு:** நண்பரின் கவனக்குறைவான செயலை சரி செய்வீர்கள். தொழில், வியாபாரத் தொடர்பு பலம்பெற, கூடுதலாக பணி புரிவீர்கள். நிலுவைப் பணமும் வசூலாகும்.

**மகரம்:** உங்கள் சிரமம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். அதிக உழைப்பால் தொழிலில் உற்பத்தி விற்பனை சீராகும். அளவான பணவரவு கிடைக்கும். கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள்.

**கும்பம்:** முக்கியப்பணி நிறைவேற உத்வேகத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள்.

**மீனம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். வேலைத் திறமையை வளர்த்து கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமாக இருக்கும். உபரி பணவருமானம் கிடைக்கும்.

புதன் பொய்கை

உதயன்

UthayanPrint

மே 22, 2019



அறிவின்
நோக்கம்
மகிழ்ச்சியைத்
தக்க வைப்பதல்ல
வலியை
நீக்குவதே...

**அரிஸ்டாட்டில்**

# இசைநாடகத் துறையின் இணையில்லாப் பெருங்கலைஞன்

# கலைவேந்தன் தைரியநாதன்

**தவமைந்தன்**



ஈழத்தமிழர்களின் மரபுவழிக் கலைகளுள் இசை நாடகம் என்னும் அரங்க முறைமையும் முதன்மையான ஒன்றாக விளங்கி வருகின்றது. தமிழகத்தில் இருந்து ஈழத்திற்கு வந்த தமிழகக் கலைஞர்களால் இந்தக் கலையானது வளர்க்கப்பட்டிருந்தாலும் நாளடைவில் இந்த இசைநாடகக் கலையானது ஈழத்துக் கலைஞர்களின் தனித்துவமான ஆற்றுகைகளால் மண்ணின் மணம் கொண்டதாக மாற்றம் கண்டது. ஈழத்து வரலாறுகள் இசைநாடகங்களாக நிகழ்த்தப்பட் டதே இதற்கான காரணம் எனவும் கொள்ளலாம்.

இந்த வகையில் ஈழத்து இசை நாடகத் துறையில் தனிப் பெரும் ஆளுமையாக எம்மோடு வாழ்ந்து மறைந்த கலைவேந்தன் ம.தைரியநாதன் மறைந்து இரண்டு ஆண்டுகள் ஆன நிலையில் அவரோடு கால் நூற்றாண்டு காலம் பணியாற்றியவன் என்ற வகையில் அவர் பற்றிய நினைவுகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விளைகிறேன்.



சுருதிமாதா, லயம் பிதா என்பது இசைப் பழமொழி. அதாவது சுருதி லயம் பிசகாது பாடும் ஆற்றல் கொண்ட ஒருவரால் இசைத் துறையில் பெரும் புகழ் பெறமுடியும். வேறுதிறன்கள் பெருமளவில் தேவையில்லை. ஆனால் பலவிதமான கலைத் திறன்கள் ஒருங்கே அமையப்பெற்ற ஒருவரால் மட்டுமே இசை நாடகத் துறையில் நின்று நிலைக்க வும்பெயர்பெறவும் முடியும்.

உணர்வு வழுவாது சுருதியோடும் லயத்தோடும் உச்சசுருதியில் பாடும் குரல் வளத்தைக் கொண்டிருத்தல், தமிழ் மொழியைத் தெளிவாக உச்சரித்தல், நீண்ட உரையாடல்களையும் பாடல்களையும் நினைவில் வைத்திருத்தல், புராண வரலாறுகளைத் தெரிந்திருத்தல் போன்ற திறன்களுடன் பாத்திரப் பொருத்தம் கொண்ட உடற் கட்டமைப்பை இயற்கையின் கொடையாகப் பெற்றிருப்பதுடன் சிறந்த நடிப்புத் திறனையும் உடையவராக இருந்தால் மட்டுமே இசைநாடகத் துறையில் காலடி வைக்கமுடியும்.



**தன்னிறைவான கலைஞன்**

இவை அனைத்திலும் தன்னிறைவான கலைஞனாக வாழ்ந்தவர் தைரியநாதன். எந்தவேடம் தரித்தாலும் அந்த வேடத்திற்கு உயிரூட்டும் அற்புதத் திறன் அவரிடம் இருந்தது. இசை நாடகத்துறையில் அவர் ஏற்காத பாத்திரம் எதுவும் இல்லை. ஒருகாலத்தில் சந்திரமதியாக நடிகமணி வி.வி.வைரமுத்துவோடு புகழ் பெற்றிருந்த தைரியநாதன் நடிகமணியின் மறைவிற்குப் பின்னர் அரிச்சந்திரனாகவும் அந்திராசியாகவும் பெரும்புகழ் பெற்றிருந்தார்.

அத்துடன் தேவைப்படும் போது ஏனைய பாத்திரங்களாகவும் மனம் கோணாது நடித்துவந்தார். நாடகத்தை அன்றி வேறொரு கலையையோ தொழிலையோ தன் கடைசிக் காலம் வரை அவரால் தெரிவுசெய்ய முடியவில்லை என்பது அவருள் இருந்த நாடகப் பற்றிற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும். எமது காலத்தில் இசை நாடகத்தை முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்த ஒரே ஒரு நடிகராகத் தைரியநாதனே விளங்கு கின்றார்.

நுண்கலைத் துறையில் சிலர் ஆற்றுகையாளர்களாக மட்டும் புகழ் பெறுகின்றனர். சிலர் ஆசிரியர்களாக மட்டும் பணிபுரிகின்றனர். சிலர் ஆராய்ச்சியாளர்களாக மட்டும் காலத்தைக் கழிக்கின்றனர். ஆனால் தைரியநாதன் போன்றசிலர் தனது துறையின் அனைத்துக் கூறுகளிலும் துறைதோய்ந்த வளவாளர்களாக வாழ்ந்துள்ளனர். தான் நடிப்பதைப் போன்று இன்னுமோர் நடிகனை உருவாக்கும் பேராற்றலும் மனப் பக்குவமும் கொண்டமிகச் சிறந்த இசைநாடக ஆசானாக ஈழத்தின் ஊர்கள், பள்ளிகள், மன்றங்கள் தோறும் அரும்பணியாற்றிய பெரும் கலைஞன் தைரியநாதனே.

மொத்தத்தில் இசைநாடகத் துறையின் கிடைத்தற்கரிய பொக்கிசமாகக் கருதப்பட வேண்டியவர் தைரியநாதன்;. சந்திரமதி, சத்தியகீர்த்தி, அரிச்சந்திரன், சத்தியவான் சாவித்திரி, அழகவல்லி, அந்திராசி, பூதத்தம்பி, கண்ணகி, மாதவி, ஞான சவுந்தரி, லேனாள், புலேந்திரன், வள்ளி, நாரதர், வேடன், பெரியகிழவன், நல்லதங்காள் போன்ற பாத்திரங்களில் மிகச் சிறப்பாகநடித்துப் புகழ்பெற்றவர். எனினும் அரிச்சந்திரன், அந்திராசி போன்ற பாத்திரங்களில் தனது அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தித் தனிமுத்திரை பதித்தவர். அத்துடன் ஈழத்தில் நிகழ்த்தப்பட்ட அனைத்து இசைநாடகங்களையும் பயிற்றுவிக்கும் ஆற்றல் கொண்டவராகவும் திகழ்ந்தவர் என்பதுடன் இசை நாடகப் பாடல்களையும் சில இசை நாடகங்களையும் புதிதாக எழுதியவர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.


இசைநாடக அரங்குக்குத் தேவையான அரங்கப் பொருள்களையும் ஆடை அணிகலன்களையும் உருவாக்குவதையும் தன் பணியாகஏற்றுச் செயற்பட்டவர். காட்சி அமைப்புக்களைப் பொருத்தமான முறையில் மேற்கொள்ளுவதிலும் வல்லவராக இருந்தவர். புதியவர்களை இசைநாடகத் துறையில் சேர்த்துக் கொள்வதிலும் பயிற்சியளிப்பதிலும் பேரார்வம் கொண்டவராக இருந்தவர்.

தைரியநாதன் இசைநாடகத் துறையில் ஆளுமை செலுத்திய முறைமை என்பதுதுறை சார்ந்தவர்களால் ஆராயப்பட வேண்டியது. ஒப்பனை செய்யத் தொடங்கும் கணத்தில் இருந்து அவர் முழுமையாகப் பாத்திரமாக மாறிவிடும் இயல்பு கொண்டிருந்தார் என்பது அவரோடு பழகியவர்களுக்கு மட்டுமே தெரிந்தவிடயம். ஒப்பனை முடிந்தகையோடு மேடையில் தோன்றினால் அவர் அரங்கைக் கையாளும் முறைகளும் துணைக் கலைஞர்களைப் பயன்படுத்தும் விதங்களும் தனித்துவமானவை. ஏனைய இசைநாடகக் கலைஞர்களில் இருந்து அவரது நடிப்பு முறைமைகள் வேறுபட்டே இருந்தன. அங்க அசைவுகள், முகத்தில் காட்டும் பாவம், குரலில் வரும் ஏற்ற இறக்கம், சகபாத்திரத்தை அணுகும் முறை, தவறுகள் ஏற்பட்டால் சீர் செய்யும் சமயோசிதம், அரங்கை முழுமையாகத் தன வசப்படுத்திக் கொள்ளும் அனுபவம் போன்றவை அவரது தனித்துவங்களாக உள்ளன.

காங்கேசன்துறை வசந்தகான சபா, திருமறைக் கலாமன்றம் போன்றவை தைரியநாதனின் வளர்ச்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்தநிறுவனங்கள் ஆகும். இந்நிறுவனங்களின் வளர்ச்சியில் தைரியநாதனின் வகிபாங்கினையும் நிராகரித்துவிட முடியாது.

தைரியநாதன் என்னும் பெருங் கலைஞன் பற்றிஅறியாதஒருவர் எதிர் காலத்தில் இசைநாடகத் துறையில் ஈடுபட முடியாது.

எனவேஅவர் பற்றியநினைவு விழாக்கள், ஆவணப்படுத்தல்கள், இசைநாடக விழாக்கள், கருத்தரங்குகள் என்பன முன்னெடுக்கப்பட வேண்டும். விருதுவழங்கும் விழாக்களிற்கு விண்ணப்பங்களைக் கோரும் திணைக்களங்கள் கலைவிழாக்களை நிகழ்த்திக் கலைஞர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர முயற்சிப்பதே காலத்தின் தேவை ஆகும்.



# வளரும் பிள்ளைகளும் அவர்கள் பெற்றோரும்

சிவராசா லோஜிகா

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையில் பின் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் பெற்றோர் வளர்ப்பினிலே......' ஆம்! உண்மைதான். பிள்ளை கள்வளர்ப்பில் பெற்றோரின் பங்கு மகத்தானது. ஆனால் இதை இன்று எத்தனை பெற்றோர்கள் உணர்ந்து செயற்படுகிறார்கள் என்பது கேள்விகுறியே. இயந்திரமயமாகி விட்ட உலகில் பணத்தையும் ஆடம்பரத்தையும் நோக்கி பெற்றோர் ஓட போதைப்பொருள், வாள்வெட்டை நோக்கி பிள்ளைகள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஓட்டப் பந்தயத்தில் யார் வெல்லப்போகிறார்கள் என்ற கேள்விக்கு அப்பால் யார் வென்றாலும் சமுதாய சீரழிவுதான் இதன் விளைவாகி நாட்டின் அழிவுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுமோ என்ற ஐயமே மேலோங்கி நிற்கின்றது.


**பிள்ளைகளை நெறிப்படுத்துவதன் அவசியம் உணரப்படல் வேண்டும்**

பிள்ளை வளர்ப்பானது சவால் மிக்கதாக இருப்பினும் அதனை போன்று மகிழ்ச்சி தரக்கூடிய வெகுமதியளிக்கக்கூடிய மனக்கிளர்ச்சியூட்டக் கூடிய இன்பமான அனுபவம் வேறெதுவும் இருக்கமுடியாது என்ற கருத்துக்கமைய இன்றைய சிறார்களே நாளையநாட்டின் தலைவர்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயம். நாளைய தலைவர்கள் சரியான பாதையில் சென்று சமூகத்திற்கும் நாட்டிற்கும் நன்மை செய்யவேண்டுமெனின் இன்றைய பிள்ளைகள் சரியான வழியில் வழிநடத்தப்பட வேண்டிய தேவை இருக்கின்றதல்லவா? பிள்ளை வளர்ப்பு என்பது பெற்றோர்களின் பொறுப்பாக உள்ளமையால் பிள்ளை வளர்ப்பினை பின்வரும் வகைகளாக குறிப்பிடமுடியும். சர்வாதிகார பெற்றோரியல், விட்டுக்கொடுக்கும் பெற்றோரியல், எதிர்விளைவை காட்டாத பெற்றோரியல், ஜனநாயக பெற்றோரியல் என்பனவாகும்.

**பெற்றோரின் வகைகள்**

சர்வாதிகார பெற்றோரியல் என்பது பிள்ளைகள் தமக்கு கீழ்ப்படிய வேண்டுமென பெற்றோர் வலியுறுத்துவார்கள். அவ்வாறு கீழ்ப்படிய தவறினால் கடுமையாக தண்டிப்பார்கள். விட்டுக்கொடுக்கும் பெற்றோரியலில் இங்கு குழந்தைகளுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கும் அவர்களைப் பெற்றோர் கண்டிக்கமாட்டார்கள் அவர்களது விருப்பப்படியே விட்டுவிடுவார்கள். எதிர்விளைவை காட்டாத பெற்றோரியலில் அவர்கள் குழந்தைகளுக்கு தேவையான விடயங்களை செய்வார்கள். ஆனால் குழந்தை என்ன செய்கின்றது ஏது செய்கின்றது என்பதைக் கவனிக்கமாட்டார்கள். ஜனநாயகப் பெற்றோரியல் ஏனைய வகை பெற்றோரியலிருந்து மாறுபட்ட ஒன்றாகும். இங்கு பெற்றோர்கள் தமது முழுகவனத்தையும் பிள்ளைகள் மீதே செலுத்துவர். கட்டுப்படுத்த வேண்டிய நேரத்தில் கட்டுப்படுத்தி விட்டுக்கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக்கொடுப்பார்கள்.

பெற்றோர்கள் தங்களுடைய விருப்பங்களை எதிர்பார்ப்புக்களை பிள்ளைகள் மீது திணிக்ககூடாது. பிள்ளைகளின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கேற்ற துறையை தெரிந்தெடுக்க அனுமதிப்பதன் மூலம்



பிள்ளைகள் சாதனைபடைக்கவும் சலிப்பற்ற மனநிறைவு பெறவும் வழிவகுக்கும். குழந்தைகளை பேணி வளர்த்து பெரியவர்களாக்குவது என்பது இன்றைய காலத்தில் குதிரை கொம்பாகதான் தோன்றுகின்றது. அந்தளவிற்கு பிள்ளைகளும் சரி பெற்றோரும் சரி நெருக்கடிக்குள் நின்று தவிர்க்கின்றனர். குழந்தை வளர்ப்பு என்பது பலவித முறைகளில் காணப்பட்டாலும் பெற்றோரும் பிள்ளைகளும் சுகந்திரமாக இருக்கும் வளர்ப்பு முறைதான் இன்றைய நவீன காலத்தில் ஏற்புடையதாக காணப்படுகிறது. இம்முறையில் பெற்றோர் பிள்ளைகளிடம் அதிக பொறுப்புக்களை ஒப்படைப்பதோடு நின்று விடாமல் அந்த பொறுப்புக்களை நிறைவேற்ற தேவையான சுதந்திரத்தையும் கொடுத்து அத்தோடு அவர்களின் திறமைகள் மற்றும் ஆற்றல்களை கணக்கில் எடுத்து கொண்டு வளர்க்கப்படுகின்றனர்.

குழந்தை வளர்ப்பில் பெற்றோர்களுக்கு பெரும் பிரச்சினையாக இருப்பது நம்மை நம் குழந்தைகள் புரிந்து கொள்வதில்லை என்ற கவலை தான். எப்படி அவர்கள் நம்மை புரிந்து கொள்ளும்படி வளர்ப்பது என்றால் அதற்கான வழிமுறைகளை பக்குவமாக கையாள வேண்டும்.

அந்தவகையில் ஆரம்பத்திலிருந்தே பிள்ளைகள் செய்யும் ஒவ்வொரு செயல்களையும் பாராட்டி குழந்தைகளின் மனதில் பதியும்படி செய்தல் வேண்டும். மேலும் அவர்கள் பள்ளியிலே நடந்தவற்றை குழந்தைகள் தம்மிடம் செல்ல முற்படும் போது நாம் செவிமடுத்து கேட்டு அதனை அங்கீகரித்து அன்பு செலுத்தி உத்வேகத்தையும் கொடுக்கவேண்டும். அப்போது அந்த குழந்தையின் பிஞ்சு மனதில் பெற்றோர் மீது நம்பிக்கை ஏற்படும் போது பிள்ளைகளை புரிந்து கொண்டு விடுவார்கள். இவ் நால்வகை பெற்றோரியலில் ஜனநாயக பெற்றோரியலே சிறந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**பெற்றோர் பிள்ளைகள் உறவுமுறையின் தன்மை**


மேலும் பெற்றோர் பிள்ளை உறவு என்பது புளியம்பழம் போன்று இருக்க வேண்டும். அதாவது புளியம்பழம் பிஞ்சாக இருக்கும் போது அதன் ஓடும் உள்ளிருக்கும் சதைப்பகுதியும் ஒன்றோடொன்று ஒட்டி பின்னிப்பிணைந்து நிற்கும். இரண்டையும் எளிதில் பிரிக்க முடியாது. அதேபோல் பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும் போது பெற்றோரும் பிள்ளையும் பின்னிப்பிணைந்து பிரிக்க முடியாதவர்களாய் இருக்கவேண்டும். பெற்றோர் புளியங்காயின் ஓடு போன்றவர்கள் பிள்ளைகள் உள்ளிருக்கும் சதைப்பகுதி போன்றவர்கள். புளியங்காய் முற்ற முற்ற அதன் ஓடு சதைப்பகுதியை விட்டு மெல்ல மெல்ல விலகும். அதே போல் பிள்ளைகள் வளரவளர பெற்றோர் பிள்ளைகளின் நெருக்கத்தை குறைத்து மெல்லமெல்ல விலக வேண்டும். புளியங்காய் நன்றாக முற்றிப்பழமானவுடன் அதன் ஓடு சதைப்பகுதியை விட்டு தனியே விலகி உள்ளிருக்கும் சதைப்பகுதியை பாதுகாத்து நிற்கும். அதேபோல் பிள்ளைகள் வாலிப வயதை அடைந்து வளர்ச்சி பெற்ற முழு மனிதர்களாய் ஆகும் நிலையில் பெற்றோர் பிள்ளைகளிடமிருந்து விலகி நிற்பது புளியம்பழ ஓட்டைப்போல, பிள்ளைகளைத் தங்கள் கண்காணிப்பு வளையத்துக்குள் வைத்து பாதுகாக்க வேண்டும்.

ஆனால் தற்காலத்தில் பிள்ளைகள் வளர்ந்தவுடன் பெற்றோர் அவர்களை கண்காணிக்க தவறிவிடுகிறார்கள். தொலைபேசி, இணையம், சமூகவலைத்தளங்கள், பொழுதுபோக்கு சாதனங்கள் போன்றவற்றால் பெரிதும் கவரப்பட்டு பிள்ளைகள் கல்வியை மறந்து பெற்றோரின் போதனை துறந்து மாயை வாழ்விற்கு அடிமையாகி பாலியல் வன்முறைகளையும் போதைப் பாவனையிலும் அதிகளவில் ஈடுபட்டு தம் வாழ்வை சீரழித்து தம் பெற்றோரின் வாழ்வையும் அழிக்கின்றார்கள்.

இந்த நிலை மாறவேண்டுமெனில் பெற்றோர் பிள்ளைகளுக்கு தேவையானவற்றை வாங்கி கொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாது அவர்களோடு நேரத்தை செலவிட வேண்டும். நல்ல நண்பர்களாக அவர்களோடு உறவைப்பேணும் போது பிள்ளைகள் தவறான வழியில் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடையும். இன்று நாட்டில் அதிகரித்து காணப்படும் குற்றங்களை குறைப்பதற்கு நாட்டில் உள்ள சட்டங்களை காட்டிலும் பெற்றோரின் சரியான வழிகாட்டலைக் கொண்ட பிள்ளை வளர்ப்பே சரியான தீர்வினைப் பெற்றுத்தரும்.

> “ பெற்றோர் பிள்ளைகளுக்கு தேவையானவற்றை வாங்கி கொடுப்பதோடு மட்டும் நின்று விடாது அவர்களோடு நேரத்தை செலவிட வேண்டும். நல்ல நண்பர்களாக அவர் களோடு உறவைப்பேணும் போது பிள்ளைகள் தவறான வழியில் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடையும்.





இராமபுரத்தூர் நிஷாந்தன்

# இன்பம் தரும் சுயம்வரம்

பழந்தமிழர் வாழ்வியலில் கடைப்பிடிக்
கப்பட்ட திருமண வழிமுறைகளில்
சுயம்வரம் என்பது சிறப்புப் பெற்றிருக்கின்
றது. சுயம்வரம் என்பது திருமண வயதை
அடைந்த பெண் தனக்கான வாழ்க்கைத்
துணையினை தானே விரும்பி ஏற்றுக்
கொள்ளும் முறையாகும். அதாவது முன்
னைய காலத்தில் மன்னர்கள் தம் மகளின்
திருமணத்தின் பொருட்டு பிற நாட்டு அரசர்
கள் மற்றும் இளவரசர்களை ஓர் சபை
யிலே கூட்டுவர். பின் அவர்களில் இருந்து
மங்கையவள் மனம் விரும்பிய ஒருவ
னுக்கு மாலை சூட்டி மணவாளனாக வரித்
துக் கொள்வதே சுயம்வர மாகும். மேலும்
குறித்த ஓர் பெண்ணின் திருமணத்தின்
பொருட்டு சுயம்வரம் அறிவிக்கப்பட்டு அர
சர்கள், இளவரசர்களை அழைத்து அவர்
களிடையே ஒரு போட்டி வைக்கப்படும்.
அப் போட்டியில் வெற்றி பெறுகின்றவர்
யாரோ அவருக்கு குறித்த பெண் மண
மாலை சூட்டி கணவனாக ஏற்றுக் கொள்
வாள். இதுவும் சுயம்வரம் சார்ந்த ஓர்
சிறப்பம்ச மாகும். ஆம். இத்தகு சுயம்வரம்
எனும் இனிய கைங்கரியம் நம் இலக்கியங்
களில் ஆங்காங்கே இழையோடியிருக்கின்
றது. ஆக. அந்தச் சுயம்வரக் காட்சிகளில்
நாமும் கலந்து கொள்வோம் வாருங்கள்.



**சீதா சுயம்வரம்**

இராமாயணத்தில் காப்பியமாகும் சுயம்வ
ரக் காட்சி இது. மிதிலை நகரின் மன்னன்
ஜனகனின் மகள் சீதை ஆவாள். மகாலட்
சுமியின் அவதார அம்சம் அவள். பேர
ழகு படைத்தவள் அவள். அத்தகு சீதை
திருமண வயதை அடைந்ததும் அவளது
திருமணத்திற் காக சுயம்வரம் ஒன்றை
அறிவித்தார் ஜனகமகாராஜா. சீதையின்
பேரழகினைக் கேண்மையுற்ற அரசர்கள்,
இளவரசர்கள் என அனைவரும் சீதை
யின் சுயம்வரத்தில் கலந்து கொண்டிருந்
தனர்.


அந்தச் சமயம் விஸ்வாமித்திர முனிவ
ரும் இராமனையும், இலக்குவனனை
யும் அவ்விடம் அழைத்து வந்திருந்தார்
என்பது குறிப்பிடத்தக்க தாகும். ஜனகரும்
சீதையின் சுயம்வ ரத்திற்கான போட்டி
ஒன்றினை அறிவித்தார். பல காலங்க
ளுக்கு முன் தம் வம்சத்தவர்க்கு கிடைத்த
சிவபெருமானது சக்தி பொருந்திய பெரும்
வில் ஒன்றை அவையின் கண் கொண்டு
வரச் செய்தார். பின் அத்தகு சிறப்பு
வாய்ந்த சிவ தனுசில் இங்கிருப்பரில் யார்
நாண் ஏற்றி அம்பு எய்கின்றனரோ அவ
ருக்கே சீதை மணமாலை சூட்டுவாள் என
அறிவித்தார் ஜனகர். இதுவே சீதையின்
சுயம்வர நியதியாகும் இதில் வெற்றி பெறு
பவர் சீதையின் மணமாலையை பெற்றுக்
கொள்வார் என்பதே அரசரது விண்ணப்ப
மாகும்.

ஜனகமகாராஜாவின் சுயம்வர அறிவிப்பி
னைக் கேண்மையுற்ற அரசர்கள் எல்லோ
ரும் சிவனது வலிமை பொருந்திய அந்த
வில்லினைக் கண்டு அதை நெருங்கக்
கூட முடியாது எனக் கூறிச் சிலர் போட்டி
யில் இருந்து ஒதுங்கிடவும், சிலர் முயன்று
பார்ப்போமே எனக் கூறி வில்லை அசைக்
கக் கூட முடியாமல் தடுமாறிக் கீழே விழுந்
திடவும் அங்கிருப்பவர் எவருமே அந்த சிவ
தனுசை கையில் எடுத்திடவே இயலாதவர்
களாய் சோர்ந்து போயினர்.

**இராமன் சிவனது வில்லை வளைத்தல்**

அவ்வேளையில் விஸ்வாமித்திர முனிவர்
இராமனை நோக்கி நீ இந்த வில்லை
வளைப்பாயாக, எனத் தன் முகக் குறிப்பி
னால் வெளிப்படுத்திட அவரது வேண்டு
தலை ஏற்று இராமனும் அந்த சிவனது
வில்லை நோக்கி கம்பீரமாக எழுந்து சென்
றான். வில்லின் அருகில் சென்றதும் தன்
சிவந்த கரங்களால் அந்த வில்லை இலகு
வான தூக்கினான் இராமன்.

அந்தக் கணமே கையில் ஏந்திய வில்லின்
ஒரு பகுதியை காலால் மிதித்து நாணினை
மறு முனையில் பிணைத்திட முற்படும்
போது பெரும் ஓசையுடன் அந்த பெருமை
மிக்க வில்லானது இரண்டாக முறிந்து
போனது. கண் இமைக்கும் நேரத்தில்
நடந்து முடிந்த இச் செயல்களை அங்கி
ருந்தோர் ஆச்சிரியம் பொங்கிட வியப்புடன்
பார்த்திருந்தனர். இந் நிலையில் தன்
மனம் முன்னமே விரும்பிக் கொண்ட
இராமனே வில்லை முறித்தான் என்பதை
கண்ணுற்ற சீதை மகிழ்ச்சிக் கடலில் நீந்தி
னாள். இருப்பினும் உள்ளத்தில் நாணம்
பொங்கிடவே தன் கரங்களில் இருந்த
மணமாலையை தன் மனம் அமர்ந்த
இராமனுக்கு சூட்டினாள். அப்போது
வானுல தேவர்கள் மலர் தூவி ஆசிர்வதித்
தனர். இவ்வாறு சீதையின் சுயம்வரம்
இனிதே நிறைவுற்றது. வாருங்கள். இனி
இன்னொரு சுயம்வரத்திற்கு செல்வோம்.



> “முன்னைய காலத்தில் மன்னர்கள் தம் மகளின் திருமணத்தின் பொருட்டு பிற நாட்டு அரசர்கள் மற்றும் இளவரசர்களை ஓர் சபையிலே கூட்டுவர். பின் அவர்களில் இருந்து மங்கையவள் மனம் விரும்பிய ஒருவனுக்கு மாலை சூட்டி மணவாள னாக வரித்துக் கொள்வதே சுயம்வர மாகும். மேலும் குறித்த ஓர் பெண்ணின் திருமணத்தின் பொருட்டு சுயம்வரம் அறிவிக்கப்பட்டு அரசர்கள், இளவரசர்களை அழைத்து அவர்களிடையே ஒரு போட்டி வைக்கப்படும். அப் போட்டியில் வெற்றி பெறுகின்றவர் யாரோ அவருக்கு குறித்த பெண் மணமாலை சூட்டி கணவ னாக ஏற்றுக் கொள்வாள்.

**திரௌபதி சுயம்வரம்**

மகாபாரதம் காப்பியம் செய்கின்ற சுயம்வ
ரக் காட்சி இது. அதுவே பாஞ்சாலி எனும்
திரௌபதியின் சுயம்வரம். பாஞ்சாலம்
எனும் நாட்டின் அரசன் துருபதன். அவன்
புரிந்த யாகத்தின் பயனாக அந்த யாக அக்
னியில் இருந்து ஒரு பெண் மகவு தோன்
றியது. அவளே திரௌபதி என்பாள். வேள்வித்
தீயில் உதித்தமையால் சிறப்புப் பொருந்தி
யவளாக விளங்கினாள் அவள். அவ்வாறே
அழகிலும் யாரும் இணையாகாத வண்
ணம் பேரழகு கொண்டவ
ளாக மணப்பருவத்தை
அடைந்தாள். இந்நிலை
யில் பாஞ்சாலியின் சுயம்

வரத்தினை நடாத்திட முடிவு செய்த மன்னன் துருபதன் சுயம்வரத்திற்கான நாளையும் முடிவு செய்தான். பாஞ்சாலியின் சுயம் வரத்தில் கலந்து கொள்ள பிற நாட்டு மன்னர்கள் மற்றும் இளவரசர்கள் எல்லோரையும் அழைத்திருந்தான். சுயம்வர மண்டபம் நிறைந்து வழிந்தது. திரௌபதியின் மணமாலையைப் பெற்றிட அனைவரும் ஆவலோடு காத்திருந்தனர்.

அவ்வேளை திரௌபதியின் அண்ணனாகிய திருஸ்டத்யும்னன் சுயம்வரத்திற்கான போட்டி விதிமுறையினை விளக்கலா யினான். போட்டி விதிமுறை இதுதான். ஒரு நீர் நிறைக்கப்பட்ட பெரும் பாத்திரம் வைக்கப்பட்டிருக்கும். அதன் மேலே ஓர் சக்கரத்தில் மீன் ஒன்று சுழன்று கொண்டிருக்கும். போட்டியாளர் சுழன்று கொண்டிருக்கும் மீனின் விம்பத்தை நீரில் கண்டு அந்த மீனின் கண்ணிற்கு அம்பினை எய்ய வேண்டும். இதுவே சுயம் வரத்திற்கான போட்டியாகும் என அறிவிக்கபட்டது. ஆயினும் இப்போட்டியில் பங்கெடுத்த அனைத்து அரசர்களும் இறுதியில் தோல்வியினையே பெற்றனர்.


இந்த நிலையில் அங்க தேசத்தின் அரசனாகிய கர்ணன் குறித்த போட்டியில் வெற்றி இலக்கினை நெருங்கும் வேளையில் அவனது பிறப்பினைக் காரணம் காட்டி திரௌபதி அவனுக்கு மாலை சூட்ட முடியாது என மறுத்து விட்டாள். இது இவ்வாறிருக்க சுயம்வரம் நடைபெறும் மண்டபத்திற்கு வருகை தந்த பஞ்ச பாண்டவர்களில் அர்ச்சுனன் குறித்த போட்டியில் கலந்து கொண்டு வில் ஏந்தி குறித்த வெற்றி இலக்கினை அம்பினாலே தகர்த்தான். போட்டியில் அர்ச்சுனன் வென்றிடவே திரௌபதியும் மனம் மகிழ்ந்து தன் மலர்மாலையை அர்ச்சுனன் கழுத்தில் சூட்டினாள். இவ்வாறு திரௌபதியின் சுயம்வரமும் இனிதே நிறைவுற்றது. இதன் பின்னரே விதி வசத்தால் திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவியானாள் என்பது தொடர்ந்து செல்லும் வரலாறு. அடுத்த சுயம்வரம் செல்வோமா?

**தமயந்தி சுயம்வரம்**

நம் இலக்கிய உலகு கண்ட அருமையான சுயம்வரக் கதையாடல் தமயந்தியின் சுயம்வரமாகும். நளவெண்பா எனும் இலக்கியத்தில் புகழேந்தியார் அழகுற காப்பியம் செய்திருக்கின்ற காட்சி இதுவாகும். ஆம். விதர்ப்பம் எனும் நாட்டின் மன்னன் வீமன். அவன் குலத்திற்கு பெருமை சேர்க்கும் படி பிறந்த மகவே தமயந்தி. திருமகள் போன்ற அழகு படைத்தவள் அவள். காண்பவரை மதி மயங்கச் செய்யும் முக வனப்பினைக் கொண்டவள்.

இப்படியிருக்க தமயந்திக்கு நளன் எனும் நிடத நாட்டு மன்னனிடத்து காதல் உண்டானது. நளனுக்கும் தமயந்தி மீது காதல் உண்டானது. ஆனால் இதுபற்றி அறியாத தமயந்தியின் தந்தையான மன்னன் வீமன் தன் மகளது சுயம்வரத்திற்கு நாள் குறித்து சுயம்வரத்திற்காக அனைவருக்கும் அழைப்பு விடுத்தான். இந்த நிலையில் தமயந்தியின் பேரழகு நலன்களை எல்லாம் கேண்மையுற்ற இந்திரன், அக்னி, யமன், வருணன் முதலிய தேவர்கள் கூட தமயந்தியின் சுயம்வர மாலையைப் பெறும் பொருட்டு சுயம்வர மண்டபம் வருகை தந்தனர்.

மேலும் பிற நாட்டு மன்னர்கள், இளவரசர்கள் என கணக்கிட முடியாதோர் அச் சுயம்வர மண்டபத்தில் கூடியிருந்தனர். தமயந்தியின் பேரழகினைக் கேள்விப்பட்டிருக்கும் யார் தான் அச் சுயம்வரத்திற்கு வராதிருப்பர்? இது இவ்வாறு இருக்க தமயந்தியோ தன் மனதில் கொண்டிருக்கும் நளனுக்கே மாலை சூட்டுவதாக மனதில் உறுதிகொண்டாள். சுயம்வரமும் இனிதே ஆரம்பமானது. தமயந்தி அங்கிருப்பவரில் மனம் விரும்பும் மன்னவனுக்கு மாலை சூட்டுவாள் என மன்னன் வீமன் அறிவித்தான்.



அதன்படி தமயந்தியின் தோழி அனைத்து அரசர்களையும் தமயந்திக்கு அறிமுகம் செய்தவாறு வருகின்றாள். ஆகா என்ன ஆச்சரியம், அங்கு ஓரிடத்தில் நளனைப் போலவே ஐவர் அமர்ந்திருக்கின்றனர். தமயந்தி நளனுக்கே மாலை சூட்டுவாள் என்பதை அறிந்த தேவர்களே அவ்வாறு நளன் உருவில் அங்கு அமர்ந்திருந்தனர். இதைக் கண்டதும் தமயந்திக்கே பெரும் சங்கடம். அவர்களில் உண்மையான நளன் யார்? என அறிய முடியாது அவளது உள்ளம் ஊசாலாடுகின்றது. இந்த நிலையில் சிறந்த குலப் பெருமையும், கற்பில் வலிமை உடையவளுமான தமயந்தி தன் புத்திக் கூர்மையினால் அங்கிருப்பவர்களில் உண்மையான நளன் யார் என அறிந்து கொண்டாள். பொதுவாகவே தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் சில மாறுபாடுகள் இருக்கும். அதாவது தேவர்கள் கண் இமைப்பதோ, அவர்கள் காலடிகள் நிலத்தில் படுவதோ, அணிந்துள்ள மலர்மாலை வாட்டமுறுவதோ கிடையாது. ஆனால் மானிடர்க்கு இவையனைத்தும் இயல்பாகவே நடைபெறும். ஆகவே இவற்றை ஆதரமாக்கி திருமகள் போலும் அழகு படைத்த தமயந்தி உண்மையான நளனைக் கண்டறிந்து அவனுக்கே தன் மணமாலையை சூட்டி மகிழ்ந்தாள். தமயந்தியின் சுயம்வரமும் இனிதே நிறைவுற்றது. ஆகா அருமையான சுயம்வரக் காட்சியல்லவா?

# கண்டுபிடிப்பாளர்களை கல்விச் சமூகம் தட்டிக் கொடுக்குமா?

கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளில் இளம் விஞ்ஞானிகள் இனங்காணப்பட்டு நாட்டின் சொத்தாக ஊக்கமளிக்கப்படுகின்றார்கள். நம் நாட்டைப் பொறுத்தவரையில் மாலை மரியாதையோடு கண்டுபிடிப்பாளர்கள் கைவிடப்படுகின்ற சோக நிலையையே காண்கின்றோம்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களான பரமேஸ்வரன் பிரவீணன், பரமேஸ்வரன் தர்ஷிகா இருவரும் இணைந்து அலைபேசி செயலி வடிவமைப்பில் (கல்குலேற்றர்) கணிப்பான் சாதனத்தின் தொழிற்பாட்டுக்கு மேலதிகமாக தரவுகளைப் பயன்படுத்தி பெறப்படும் விடையுடன் செய்கை வழித் தரவுகளையும் ஒரே நொடியில் காண்பிடிக்கும் வகையில் இந்தச் செயலியைக் கண்டுபிடித்திருப்பது இலங்கையில் ஒரு விஞ்ஞான புத்தெழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. மாணவர் மத்தியில் இவர்களின் கண்டுபிடிப்பு ஒரு பெருஞ்சாதனையே. இதனை எம் மண்ணில் இருக்கின்ற எத்தனை விஞ்ஞானிகள் பாராட்டினார்களோ யாமறியோம். இவர்களைப் போல எத்தனை இளைஞர்கள் விஞ்ஞான ரீதியாகவும் விவசாய ரீதியாகவும் கடந்த வருடங்களில் சாதித்திருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு என்ன நடந்தது என்று எமக்குத் தெரியவில்லை. வடக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் இது வரை எழுச்சி பெறவுமில்லை. ஆட்சி பெறவுமில்லை. அல்லது நாமறியவில்லையோ தெரியவில்லை. கோயில் கோயிலாக கோபுரமாகக் கட்டி அதுவே பெரிய சாதனையெனக் கொடிகட்டிப் பறக்கின்றோம்.



வடக்கு மாகாணத்தின் விஞ்ஞான மூளைகளுக்கு நாம் ஏற்ற களம் அமைத்துக் கொடுக்கவில்லை. சீனாவைய்யும் இந்தியாவையும் மத்திய கிழக்கையும் கொழும்பையும் நம்பியே வாழ்கின்றோம். MADE IN JAFFNA (மேட் இன் ஜப்னா) வர வேண்டும். அது எப்போ? தேசிய ரீதியில் டயலொக் நிறுவனம் நடத்திய அலைபேசி செயலி வடிவமைப்பு 2018ஆம் ஆண்டுக்கான போட்டியில் பதினொரு பாடசாலை அணிகள் மேற்படி செயலியை முன்வைத்திருந்தன. இறுதிச் சுற்றில்சகல அணிகளும்றோயல்கல்லூரியிலே சந்தித்தன. நடுவர்களின் தீர்ப்புக்கமைவாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிசார்பாக பிரவீணன், சகோதரி தர்ஷிகா இருவரும் முதலாம் இடத்தைச் சாதனையாக்கினார்கள்.

இது இலங்கையைப் பொறுத்தவகையில் பிரம்மாதமேயாகும். மென்மேலும் இவர்களை விஞ்ஞான உலகத்தினர் கைகொடுத்து வளர்ப்பார்களாயின் யாழ்ப்பாணம் உலகில் ஒரு வரப்பிரசாதமான ஒரு பகுதியாக மிளிரும்.

எல்லோரும் தங்கள் தங்களை வளர்ப்பதற்கு அரசியலையும் ஆன்மிகத்தையும் ஒரு ஊடகப் பொருளாக வைத்திருக்கிறார்களேயொழிய எதைத் தான் சாதனையாக்கியுள்ளார்கள். விவசாயத்தில் பயனுள்ள புதுமைகளைக் கண்டு பிடிக்கவல்ல. ஒரு விஞ்ஞான சமூகம் தோற்ற யாம் பிரார்த்திப்போமாக. அது இவர்களால் முடியும்.

## உயர்தரப் பிரிவுகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 22
ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பிரிவின் கணிதம், உயிரியல் தொழில்நுட்பப்பிரிவு, மற்றும் வர்த்தகப்பிரிவுகளுக்கான புதிய கல்வியாண்டுக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாக உள்ளதென்பதால் பாடப்பிரிவுகளுக்கு பதிவு செய்த மாணவர்கள் இன்று பாடசாலைக்கு வர வேண்டும் என்று அதிபர் மு.செல்வஸ்தான் அறிவித்துள்ளார்.

அதேநேரம் கலைப்பிரிவுக்கான கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சிமிழ் கண்ணகி ஆலயத்தின் திருவிழா தொடர்பாக சர்ச்சை

### சமூகப் பாகுபாடு காட்டப்படுகின்றது என பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 22
தென்மராட்சிப் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு சிமிழ் கண்ணகி ஆலய வருடாந்தத் திருவிழா இம்முறை நடத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அதற்குச் சமூகப் பாகுபாடே காரணம் என்று தெரிவித்து சாவகச்சேரிப் பிரதேச செயலக முன்றலில் நேற்று மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஆண்டு இந்த ஆலயத்தின் தேர்த் திருவிழாவின்போது தேர் பெக்கோ இயந்திரம் கொண்டு இழுக்கப்பட்டது. அதற்குச் சமூகப் பாகுபாடே காரணம் என்று அப்போது பலரும் கூறியிந்தனர். இயந்திரம் மூலம் தேர் இழுக்கப்பட்டமை சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. இந்த ஆண்டுத் திருவிழா தொடர்பாக அந்தப் பகுதி மக்களுடன் தென்மராட்சிப் பிரதேச செயலர் கலந்துரையாடியிருந்ததுடன், ஒன்றுமையாக அனைவரும் திருவிழாவை நடத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருந்தார்.

எனினும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை திருவிழா ஆரம்பமாகவிருந்தநிலையில், ஒரு தரப்பினரால் திருவிழா திடீரென நிறுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. அதனால் ஒருபகுதி மக்கள் நேற்று மதியம் சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆலயத்தில் அனைவருக்கும் சமவுரிமை வேண்டும் சாதிப்பாகுபாடு பார்க்கக் கூடாது, கடந்த வருடம் இயந்திரத்தால் தேர் இழுக்கப்பட்டமை ஏற்றுக்கொள்ளப்படமுடியாது அதற்கான தீர்வு என்ன போன்ற வசனங்கள் எழுதப்பட்ட சுலோகங்களைப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஏந்தியிருந்தனர்.

அவர்களைச் சந்தித்த பிரதேச செயலர் இந்த ஆலய பிரச்சினையை தம்மால் தீர்க்க முடியாதுள்ளதால், நீதிமன்றத்தை நாடித் தீர்வைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று தெரிவித்தார்.

சிமிழ் கண்ணகை அம்மன் ஆலய திருவிழாவில் ஏழாந்திருவிழாவை எமது சமூகத்தை சேர்ந்த மக்கள்தான் செய்கின்றோம். ஆனால் இந்த முறை திருவிழா செய்வதானால் நாம் சுவாமி தூக்கக்கூடாது என்று கூறினார்கள். இதற்கு நாம் உடன்படவில்லை இதனால் நேற்று தொடங்க வேண்டிய வருடாந்த திருவிழாவையே நிறுத்திவிட்டார்கள் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (எ-37)

## ஐ.தே.மு....

றன்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளால் இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் பற்றி முற்கூட்டியே தெரிந்திருந்தும் அவற்றை தடுத்து நிறுத்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு தவறியிருந்தது என்று தெரிவித்தே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மக்கள் விடுதலை முன்னணி கொண்டுவந்துள்ளது.

இந்தத் தீர்மானத்தில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியின் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டுள்ளனர். (எ,22)

## இராணுவம்...

னையிடப்பட்டுத் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டது. அந்தக் கார் ஆனையிறவு சோதனைச் சாவடியில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. காரைச் செலுத்திச் சென்றவர் சோதனைச் சாவடியில் பதிவை மேற்கொள்ளச் செல்ல, மற்றையவர் காரின் பின்பகுதியைச் சோதனை செய்வதற்காகத் திறந்து விட்டுள்ளார். இராணுவச் சிப்பாய் அந்தக் காரைச் சோதனையிட்டார். அப்போது காரின் பின்பகுதியில் இரு துப்பாக்கி ரவைகள் இருந்தன என்று இராணுவத்தினர் தெரிவித்து அவர்கள் இருவரையும் கைது செய்தனர். பளைப் பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பான உண்மைத் தன்மையைக் கண்டறியுமாறு பொலிஸாரை அறிவுறுத்திய நீதிவான், காரில் பயணித்த இருவரையும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிப்பதற்குப் பொலிஸார் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. அதனால் இரு சந்தேகநபர்களையும் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது. (எ-37)

## யாழ். ...

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு மாணவர் ஒன்றியத்தினர் எழுத்துமூலம் அறிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் இருவரும், சிற்றுண்டிச்சாலை நடத்துநரும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை வழக்கில் இருந்து முழுமையாக விடுவிக்க வேண்டும் என்றும், மாணவர்கள் நலன்சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் எழுத்துமூலமும், நேரடியாகவும் பலதடவைகள் வலியுறுத்தியும் முன்னேற்றம் எதுவும் ஏற்படாததாலும் இன்று முதல் கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளோம் என்று பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

**பின்னணி**

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் கடந்த 3ஆம் திகதி இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது, அங்குள்ள கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினரின் படம் இருந்து என்று தெரிவித்துக் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரும், செயலாளரும் கைது செய்யப்பட்டனர். அங்குள்ள சிற்றுண்டிச் சாலையில் தியாகி திலீபனின் ஒளிப்படம் இருந்தது என்று தெரிவித்து சிற்றுண்டி நடத்துபவர் கைது செய்யப்பட்டார். மாணவர்கள் இருவரும் அன்று இரவு 8.30 மணியளவில் நீதிவான் இல்லத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். சிற்றுண்டிச் சாலை நடத்துபவர் மறுநாள் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு அவரும் 16ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

வழக்கு கடந்த 16ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் மீதான வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (எ)

## மைத்திரி, ரணில்...

பதியுதீன்.

அங்கு கருத்துத் தெரிவித்த ரிசாத், எனது அரசியல் வாழ்க்கையை இல்லாமலாக்க எதிர்க்கட்சி முயல்கின்றது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயராகவே உள்ளேன்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் இராணுவத் தளபதிக்கு அழுத்தத்தை வழங்கவில்லை. கைதான ஒருவரின் விவரத்தையே கேட்டேன். அரச தலைவர் அல்லது தலைமை அமைச்சர் கூறினால் இப்போதே பதவி விலக நான் தயார் என்று அவர் தெரிவித்தார் என்று அறிய முடிகின்றது. (எ)

## திகதி...

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று நாடாளுமன்றில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது:

தன்னைச் சிறந்த பௌத்தர் என்று கூறிக் கொள்ளும் சபாநாயகர், ரிசாத் விடயத்தில் என்ன நடவடிக்கை எடுக்கிறார் என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதால் அது சபைக்கு வரும் வரை இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுக்கப்படக் கூடாதென இன்று (நேற்று) கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறியுள்ளார். இது ஏற்றுக்கொள்ள முடியாதது. எங்களுக்கு விரைவில் ஒரு திகதி கிடைக்காவிட்டால் மக்களை கொண்டு நாடாபாராளுமன்றத்தை முற்றுகையிடுவோம்.

இங்கே உள்ள அமெரிக்கத் தூதுவர் இங்கு வர முன்னர் ரீயுனிசிய . சிரியாவில் பணிபுரிந்தவர். ஒரு நாட்டில் குழப்பங்கள் இருந்தால் தான் அமெரிக்காவின் தலையீடு நடக்கும். அவர்கள் வர அதுவே வசதி. இப்போது விகாரைகளுக்கு செல்லும் அமெரிக்க தூதுவர் தனது பணியை இங்கு செவ்வனே செய்ய ஆரம்பித்துள்ளார். இன்று ஆளுங்கட்சி கூட்டத்தில் அமைச்சர் ரிசாத் தான் பதவி இராஜினாமா செய்தால் அரசு கவிழ்ந்து விடுமென அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பேசியுள்ளார். அரசு ஏற்கனவே கவிழ்ந்து போய் தான் உள்ளது. என்றார். (எ)

## டிராக்டரை...

நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த சுகிதன் (வயது 6) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான். கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்று வரும் சிறப்புத் தேவையுடைய இந்த மாணவன் வகுப்பில் மிகவும் துடிப்புள்ள மாணவன் என்று ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

சிறுவனின் தந்தை வயலுக்குச் சென்றுவிட்டு வீட்டுக்கு உழவியத்தைக் கொண்டு வந்துள்ளார். அதை நிறுத்திவிட்டு திறப்பை அதிலேயே கைவிட்டு உணவருந்தச் சென்றுள்ளார். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தில் ஏறிய சிறுவன் அதை திறப்பு போட்டு இயக்கியுள்ளார். உழவு இயந்திரம் நகர்ந்து மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. தூக்கி எறியப்பட்ட சிறுவன் உழவியந்திரச் சில்லுக்குள் நசியுண்டுள்ளார். உடனடியாகச் சிறுவனை கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்தமை தெரியவந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-214,222)

## புலிச் சீருடை...

இரண்டு குண்டுகள், துருப்பிடித்த துப்பாக்கி ரவைகள், வோக்கி டோக்கி ஒன்றின் சிதைவுகள், இலக்கத்தகடு, சயினைட் குப்பி ஆகியனவும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட எச்சங்களிலிருந்து இருந்து கண்டுப்பிடிக்கப்பட்ட இலக்கத் தகட்டில் த.வி.பு ஐ -2719 என்ற இலக்கம் காணப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-7)

## சங்கிரிலா...

வித்துள்ளது.

கடந்த மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில், கொழும்பு சங்கிரிலா விடுதியில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தி உயிரிழந்தவர், தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவர் மொஹமட் சஹ்ரான் ஹஸீம் தான் என்பது மரபணுப் பரிசோதனை (டீஎன்ஏ) மூலம் உறுதியாகியுள்ளது என அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத் தகவல்கள் உறுதி செய்துள்ளன.

தற்கொலைத்தாரியான சஹ்ரானின் மகள், சகோதரி ஆகியோரின் மரபணுக்களின் மாதிரிகளைக் கொண்டு, கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்ட மரபணுப் பரிசோதனையின் அடிப்படையில், இந்த விடயம் உறுதியாகியுள்ளது என்று அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (எ)

## ரிசாத் ...

ரும் சொல்கிறார்கள் என்பதற்காக அமைச்சர் பதவியிலிருந்து ரிசாத்தை விலகச் சொல்வது முறையானதல்ல என்று தெரிவித்துள்ளார். கூட்டத்தில் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன , ஹெக்ரர் அப்புஹாமி ஆகியோர் அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவை வழங்க வேண்டி வரும் என்று தெரிவித்தனர். அதேசமயம் அமைச்சர் ரிசாத் தற்காலிகமாக பதவி விலகுவது நல்லது என்று கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இதன்பின்னர் கருத்துத் தெரிவித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ரிசாத் மீதான குற்றச்சாட்டுக்களை ஆராய நாம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்போம். அது சுயாதீனமாக ஒரு முடிவை சொல்லட்டும். ரிசாத் மீது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவரை நானே பதவியில் இருந்து நிறுத்துவேன். அப்படியில்லாமல் கண்டபடி செயற்பட முடியாது. ரிசாத்தைப் பதவி நீக்கி அரசை ஆட்டம் காணச் செய்வதா அல்லது அரசையும் பாதுகாத்து அவரையும் பாதுகாப்பதா என்பதை முடிவு செய்யுங்கள் என்று குறிப்பிட்டார் என்று தெரியவருகின்றது.

அதேவேளை, கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அமீரலி தமது தலைவர் மீது முன்வைக்கப்படும் விமர்சனங்கள் குறித்து கடும் விசனம் வெளியிட்டதுடன் எந்த நேரத்திலும் அமைச்சுப் பதவிகளை உதறித் தள்ளிவிட்டு போக தாங்கள் தயாராக உள்ளோம் என்று கூறியுள்ளார்.(எ)

## பழைய...

மாகாணத் தேர்தலைப் பழைய முறைமையில் நடத்தலாம் என்று பெரும்பாலானவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சிறு திருத்தங்களை மேற்கொண்டு பழைய முறைமையில் தேர்தலை நடத்துவது தொடர்பாக விரைவில் தீர்மானிக்கலாம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அதன்போது குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறைமையிலேயே நடத்துவது என்று ஏறத்தாழ முடிவெடுக்கப்பட்டது. அதற்கு முன்னர் பழைய முறைமையில் உள்ள சில குறைபாடுகளை நீக்குவது தொடர்பாகவும் பேசப்பட்டது.பழைய தேர்தல் முறைமையில் தேர்தலை நடத்துவதற்காக எவ்வாறான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக அமைச்சர்களான மனோ கணேசனும், ரவூப் ஹக்கீமும் அரச தலைவர் மைத்திரிபாலவுடன் பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பாதிப்படையாதவாறு இருக்கச் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த இரு அமைச்சர்களும் வலியுறுத்துகின்றனர் என்றும் தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார் (எ,22)

# ஜொலிஸ்ரார் வி.க. அபார வெற்றி


யாழ்ப்பாணம், மே 22
யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான 50 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்ட தொடரில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 3 இலக்குகளால் வெற்றி பெற்றது.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ் விளையாட்டுக்கழக ரியை எதிர்த்து அரி லை சென்றல் விளை ட்டுக்கழக அணி மோதி
முதலில் துடுப்பெடுத் பாலை சென்றல் டுக்கழக அணி துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 188 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அணி சார்பில் கபில்ராஜ் 52 ஓட்டங்களையும், சதீஸ் 32 ஓட்டங்களையும், பிரிசங்கர் 21ஓட்டங்ககளையும், அதிக பட்சமாகப் பெற்றார்.
பந்துவீச்சில் ஜனார்த்தன் 4 இலக்குகளையும், பிரசன்னா , கிருசோபன், தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 38பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
அணி சார்பில் ஜனார்த்தனன் ஆட்டமிழக்காமல் 82 ஓட்டங்களையும், தனுஸ்ரன் 31 ஓட்டங்களையும், சந்தோஷ் 26 ஓட்டங்களையும், கிருசோபன் ஆட்டம் இழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் பிரிசங்கர் 3 இலக்குகளையும், சுஜீவன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)



உலகக் கிண்ண

# வலைப்பந்தாட்ட அணியில் தமிழ் வீராங்கனைகள் இருவர்

யாழ்ப்பாணம், மே 22
இங்கிலாந்தின் லிவர்பூலில் எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 15ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரில் பங்கேற்கவுள்ள 12 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தழிழ் வீராங்கனைகளான தர்ஜினி சிவலிங்கம், எழிலேந்தினி சேதுகாவலர் ஆகிய இருவரும் இடம்பிடித்துள்ளனர்.
வலைப்பந்தாட்ட அணியினர் தமது பயிற்சி ஆட்டத்துக்காக நேற்று பொஸ்வானா பயணமானார்கள். ஆஸ்திரேலியாவில் கழகங்களுக்கிடையிலான





போட்டியில் தர்ஜினி சிவலிங்கம் இருப்பதால் அந்தப் போட்டிகள் முடிவடைய தர்ஜினி சிவலிங்கம் அணியுடன் இணைந்து கொள்வார். (23)

# திருநெல்வேலி துடுப்பாட்ட வி.க. அணி சென்றலைட்ஸை வீழ்த்தி இறுதிக்குள்

யாழ்ப்பாணம், மே 22
கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி வெற்றிக்கிண்ணத்துக்கான 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பார்ட்டத் தொடரில் திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணி 53 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் திருநெல்வேலி துடுப்பாட்ட விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி துடுப்பாட்ட விளையாட்டுக் கழக அணி 29.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழத்து 210 ஓட்டங்களைக் குவித்தது.
அதிகபட்சமாக அனுரதன் 49 ஓட்டங்களையும், சுவேந்திரன் 47 ஓட்டங்களையும், சுரேஸ் 35 ஓட்டங்களையும், றொகான் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் டார்வின், ஜெரிக், மயூரன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சாள்ஸ், அலன்ராஜ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு களமிறங்கிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 25.3 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் 53 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அணி சார்பில் ஜெனோசன் 49 ஓட்டங்களையும், கௌதமன் 40 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் பிரபு,தீபன், ஆகியோர் தலா 3 இலக்குகளையும், சுரேஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (23)



# இந்து இளைஞர் வி.க. இறுதிக்கு முன்னேறியது

யாழ்ப்பாணம், மே 22
கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்ட கழகங்களுக்கிடையிலான மூன்றாம் பிரிவு அணிகளுக்கான 50 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்ட தொடரில் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 120 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் யுனைரெட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 43 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது.
அணி சார்பாக அனுசன் 53ஓட்டங்களையும், பார்த்தீபன் 43 ஓட்டங்களையும், நிரேசன் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் துசி 3 இலக்குகளையும், யஜீபன், காந்தறூபன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
270 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய யுனைரெட் விளையாட்டுக் கழக அணி 35 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.
அணி சார்பில் யஜீபன்37 ஓட்டங்களையும், பிரியன் 28 ஓட்டங்களையும், பிரதீபன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் அனுசன் 4இலக்குகளையும், பார்த்தீபன் 3 இலக்குகளையும் ,றொஸ்கோ 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)



# புளூ ரொக்கெட் அபார வெற்றி!

யாழ்ப்பாணம், மே 22
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யங்கம்பன்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புளூரொக்கெட் அணி வெற்றிபெற்றது.
கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில்; இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலி போய்ஸ் அணியை எதிர்த்து புளூ ரொக்கெட் அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் புளூ



ரொக்கெட் அணி வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக புளூ ரொக்கெட் அணி வீரர் ஆகாஷ் தெரிவு செய்யப்பட்டார். (ம-23)

## 07 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 . 10 . 1972
மறைவு 22 . 05 . 2012

அமரர்
**செல்லத்துரை டேமியன்**

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அந்திரான்,
சண்டிலிப்பாய்.
(CS 25417) (14.17)
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்கள்



மலர்வு 07 . 01 . 1934
உதிர்வு 20 . 05 . 2019

**சுப்பிரமணியம் ஜெயபாலசிங்கம்**

சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜெயபாலசிங்கம் கடந்த (20.05.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு
077 679 1506
077 226 9849
077 418 9691

தகவல்:
குடும்பத்தினர்.



## திருமதி சின்னம்மா கிருஷ்ணபிள்ளை



தோற்றம் 19.11.1933
மறைவு 19.05.2019

புற்றளை புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா கிருஷ்ணபிள்ளை கடந்த (19.05.2019) ஞாயிற்றுக் கிழமைஇறைபதமடைந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும் வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் கிருஷ்ண பிள்ளையின் அன்பு மனைவியும் யோகநாதன் (ஓய்வுபெற்ற சுகாதார திணைக்கள அலுவலர்), குகநாதன் (அதிபர் யா / புற்றாளை ம.வி), சூரிய குமாரி, குலநாதன் (பொறியியலாளர் , கனடா), காலஞ்சென்றவர்களான சத்தியநாதன், திலகநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் தவமணி தேவி, இந்துமதி, (நிதி உதவியாளர் பிரதேச செயலகம், பருத்தித்துறை) செல்வலிங்கம் (லிபேட்டி பிளாஸ்ரிக், கொழும்பு), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கார்தீபன் (ICT ஆசிரியர், முக்கொம்பன் மகாவித்தியாலயம், கிளிநொச்சி), சங்கவி (ICT 2 ஆம் வருட மாணவி, யாழ் பல்கலைக்கழகம், வவுனியாவளாகம்), துஷ்யந்தி (மருத்துவ பீடம், 1 ஆம் வருட மாணவி கொழும்பு பல்கலைக்கழகம்), மாதங்கி (A/L 2019 உயிரியல்பிரிவுயா/மெதடிஸ்தபெண்கள்உயர்தரபாடசாலை), அசோகன் (A/L 2020 கணிதப்பிரிவு, மாணவன் யா/ஹாட்லிக்கல்லூரி) மதுசனா, ஹரிஸ், அக்சிதாஆகியோரின்அன்புப்பேர்த்தியும்காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, பொன்னம்பலம், வேலுப்பிள்ளை, கந்தையா மற்றும் இலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதாரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2019) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புற்றளை, புலோலி.
யோகநாதன் - 077 704 4916
குகநாதன் - 077 622 5051
குலநாதன் - 161 331 43377
சூரியகுமாரி - 077 165 4607

தகவல்:
குடும்பத்தினர்.


இலங்கைக் கிரிக்கெட் அணியின்

# வீரர்கள், நிர்வாகிகள் மீது முரளிதரன் கடும் பாய்ச்சல்



மகேல ஜெயவர்த்தன இலங்கை கிரிக்கெட்டில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சித்து தோல்வியடைந்தார் நான் அந்தப் பாதையில் பயணிக்க விரும்பவில்லை அந்த முயற்சி அர்த்தமற்றது என கருதியதன் காரணமாகவே நான் அதில் ஆர்வம் காண்பிக்கவில்லை எனவும் முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கை கிரிக்கெட் குறித்து நான் தற்போது எந்தக் கருத்தையும் வெளியிடவிரும்பவில்லை,கடந்த இரண்டு மூன்று வருடங்களில் இடம்பெற்ற விடயங்களை வைத்து பார்க்கும்போது நாங்கள் சரியான திசை நோக்கி செல்லவில்லை.

பலர் இலங்கைக் கிரிக்கெட்டை பொறுப்பேற்றுள்ளனர், அணித்தலைவர்கள் மாற்றப்பட்டுள்ளனர், எங்கள் வீரர்கள் தங்கள் திறமையை நிரூபிப்பதற்கு நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. இளம் வீரர்களை வளர்த்தெடுக்கவில்லை.

பயிற்றுவிப்பாளர்களைப் பொறுத்தவரை உரிய அமைப்பு முறை அவசியம். உலகக் கிண்ணப்போட்டிகளுக்குப் பின்னர் இதனை செய்ய வேண்டும் மீண்டும் அணியை கட்டியெழுப்பவேண்டும்.

மகேல இலங்கை கிரிக்கெட்டில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சித்தார் ஆனால் தோல்வியடைந்தார். நான் அந்தப் பாதையில் பயணிக்க விரும்பவில்லை அந்த முயற்சி அர்த்தமற்றது என கருதியதன் காரணமாகவே நான் அதில் ஆர்வம் காண்பிக்கவில்லை.

இலங்கை கிரிக்கெட்டுடன் தொடர்புடைய அதிகாரிகள் எங்கள் யோசனைகளை கருத்திலெடுப்பதில்லை. அவர்கள் தாங்கள் நினைத்ததை செய்கின்றனர், நாங்கள் வெளியாட்கள் போல காணப்படுகின்றோம் என்பதே உண்மை, நாங்கள் அந்த அமைப்பின் ஒரு பகுதியாகக்கூடவில்லை. மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான அதிகாரமும் எங்களிடம் இல்லை.

அணிக்கு தலைமை தாங்குபவர்கள் யாராகயிருந்தாலும் அவர்கள் துணிச்சலான தைரியமான வீரர்களாகக் காணப்படவேண்டும்.

திமுத் கருணாரட்ணவுக்கு இந்த குணாதிசயங்கள் உள்ளனவா என்பது எனக்கு தெரியவில்லை, ஒரு தலைவராக நான் அவரை அதிகளவுக்கு அவதானிக்கவில்லை.

அவர் அணித்தலைவராகக் காணப்படுகின்றமையால் அவர் முதலில் ஓட்டங்களைப் பெறவேண்டும், அவரால் ஓட்டங்களைப் பெற முடியாவிட்டால் அவர் பலவீனமான தலைவராகவே விளங்குவார். அதேவேளை புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவது சிறந்தது ஏனெனில் அது அணியை ஒன்றுபடுத்துவதற்கு பெரும் உதவியாக அமையும்.

அணியின் பயிற்றுவிப்பாளர் சண்டிக ஹதுருசிங்கவுக்கு சில வீரர்களுடன் முரண்பாடுள்ளது. அவர் சில வீரர்கள் குறித்து மிகக்கடுமையாக நடந்துகொண்டார், முடிவுகளை எடுக்கும்போது குறுகிய மனதுடன் செயற்படுவார். இது உண்மையா பொய்யா என்று தெரியாது ஆனால் அணியை ஒற்றுமையுடன் வைத்திருக்க முடியாவிட்டால் அவர் தோல்வியடைந்தவரே. ஒரு அணியாக விளையாடுங்கள் தனிநபராக விளையாடாதீர்கள் என்பதே இலங்கை அணிக்கான எனது ஆலோசனை - என்றார்.


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி நித்தியா செங்கையாழியன்
அவர்களின் மாமனார்

**சின்னத்தம்பி முருகேசு**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 10255) (14.17)

பாடசாலைச் சமூகம்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 14 . 10 . 1936
உதிர்வு 22 . 04 . 2019

கடந்த 22.04.2019 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த

**அமரர் தர்மலிங்கம் புவனேஸ்வரி (ராசாத்தி)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (22.05.2019) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
குடும்பத்தினர்.



## மரணஅறிவித்தல்

**கார்த்திகேசு கணேசராசா**



புதுறோட், கரவெட்டி மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஸ்ரீபரமானந்தா முதியோர் இல்லத்தில் வசித்தவருமான கார்த்திகேசு கணேசராசா 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் பூதவுடல் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீபரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம்
வதிரி, கரவெட்டி.

தகவல்:
நிர்வாகத்தினர்.

021 226 3136



## பெண் வேலையாள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை. வேலை நேரம் காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை.

தொடர்பு 076 118 4010

# Everpure Hi-Tec (Pvt) Ltd.

**Professional in Total Water Management**

# கோலாகல திறப்பு விழா

**நீர் சுத்திகரிப்புத் துறையில் முன்னோடியும், சுற்றாடல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்டதுமான Everpure Hi-Tec (Pvt) Ltd. நிறுவனம் தனது பிரம்மாண்டமான காட்சியறையையும் விஸ்தரிக்கப்பட்ட பணிமனையையும் இல.581, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இன்று 22.05.2019 (புதன்கிழமை) முற்பகல் 9.30 மணியளவில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. இவ்விழாவிற்கு உங்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

கொள்வனவு செய்யப்படும் / பதிவு செய்யப்படும்
அனைத்து பொருட்களுக்கும்

**விசேட விலைக்கழிவுகளும்**
**இலவச பரிசுகளும்**







**Hotline: +94 212 226 888**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.